بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ    نَحْمَدُهٗ وَنُصَلِّيْ عَلٰى رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 3

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

The Weekly BADAR Qadian TAMIL

இதழ் 14-15

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் ரஃபீக் அஹ்மது

17-24 ரஜப் 1439 ஹிஜ்ரி கமரி    5-12 ஷஹாதத் 1397 ஹிஜ்ரி ஷம்ஸி

5-12 ஏப்ரல் 2018

### அல்லாஹ்வின் கட்டளை

يٰٓاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوا

اسْتَعِيْنُوْا بِالصَّبْرِ وَالصَّلٰوةِ

اِنَّ اللّٰهَ مَعَ الصّٰبِرِيْنَ

நம்பிக்கை கொண்டவர்களே! பொறுமை, பிரார்த்தனை இவற்றின் மூலம் (அல்லாஹ்விடம்) உதவி கோருங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கின்றான்.

(அதிகாரம் அல் பக்கரா : 154)

### அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய–தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது குறிப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி–யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

**غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ مُنْعَمْ عَلَيْهِ مَغْضُوْبِ عَلَيْهِمْ அதாவது, நாம் இறைவனின் அருட்கொடைகளைப் பெற்றவர்களாக ஆன பிறகு அவனது கோபத்திற்கு ஆளானவர்களாக நாம் ஆகி விடக் கூடாது என்ற இந்த துஆவை தொழுகையில் இறைவன் நமக்கு கற்றுத் தந்துள்ளான். எனவே, எப்போதும் இறைவனின் தன்னிறைவுத் தன்மைக்கு அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும்.**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

**126 -வது அடையாளம்:** லூதியானாவில் மீர் அப்பாஸ் அலி என்ற பெயரில் ஒரு நபர் இருந்தார். அவர் பைஅத் செய்தவர்களில் ஒருவராக இருந்தார். சில வருடங்கள் வரை கலப்பற்ற தன்மையில் எந்த அளவு முன்னேறி இருந்தார் என்றால் அவரது தற்போதைய நிலைமை தொடர்பாக ஒருமுறை اَصْلُهَا ثَابِتٌ وَّفَرْعُهَا فِى السَّمَآءِ (அதன் வேர் உறுதியாகவும் அதன் கிளைகள் வானத்தை தொடும் அளவிலும் உள்ளன) என்று ஒருமுறை இல்ஹாம் வந்தது. அந்த காலத்தில் அவர்கள் கொள்கையில் உறுதியாக இருந்தார்கள் என்பது மட்டுமே அந்த இல்ஹாமின் பொருளாகும். அவ்வாறே அவர்களுக்கு என்னை பற்றி பேசுவதை தவிர வேறு எந்த வேதனையும் இருந்ததில்லை என்ற அளவில் அந்தக் காலத்தில் அவர்கள் அடையாளங்களை வெளிப்படுத்திக் காட்டினார்கள். எனது ஒவ்வொரு கடிதத்தையும் எழுத்துக்களையும் மிகவும் அருளுக்குரியதாகக் கருதியவாறு தமது கையால் அதன் நகலை அவர்கள் எழுதினார்கள். மேலும், மக்களுக்கு அறிவுரை கூறி வந்தார்கள். உணவு விரிப்பில் ஒரு காய்ந்து போன துண்டு இருந்தாலும் கூட அதனை அருளுக்கு உரியதாகக் கருதி சாப்பிட்டு வந்தார்கள். எல்லாரையும் விட முதலாவதாக லூதியானாவிலிருந்து அவர்கள்தான் காதியானுக்கு வந்தார்கள். ஒருமுறை எனக்கு இறைவனிடமிருந்து அப்பாஸ் அலிக்கு தடுமாற்றம் ஏற்பட்டு விடும். அவர் முகந்திரும்பிச் சென்று விடுவார் என்று காட்டப்பட்டது. அவர்கள் எனது கடிதத்தையும் கூட எனது மல்ஃபூஸாத்தில் இடம்பெறச் செய்திருந்தார்கள். அதற்கு பிறகு அவர்களுடன் சந்திப்பு நிகழ்ந்தபோது அவர்கள் என்னிடம் என் தொடர்பாக நீங்கள் பார்த்திருக்கின்ற கஷ்ஃப் பற்றி எனக்கு மிகவும் வியப்பாக இருக்கின்றது. ஏனென்றால் நானோ உங்களுக்காக மரணிப்பதற்கு ஆயத்தமாக உள்ளேன் என்று கூறினார்கள். அதற்கு உங்களுக்கு என்ன விதிக்கப்பட்டிருக்-கின்றதோ அது நிறைவேறும் என்று நான் பதில் கூறினேன். இதற்கு பிறகு வாக்களிக்கப்பட்ட மஸீஹாக நான் இருக்கின்றேன் என்று நான் வாதம் செய்த போது அந்த வாதம் அவர்களுக்கு விருப்பமில்லாததாக இருந்தது. முதலில் உள்ளத்தளவில் நிம்மதியற்ற நிலை அவர்களுக்கு இருந்து வந்தது. அதற்கு பிறகு என் தரப்பிலிருந்து மவ்லவி அபூஸயீத் முஹம்மது ஹுஸைன் சாஹிபுடன் லூதியானாவில் விவாதம் நடைபெற்ற சமயத்தில் அந்த நிகழ்ச்சியின் காரணமாக சில நாட்கள் வரை அவர்களுக்கு அந்த எதிரிகளின் நட்பும் கிடைத்தபோது இறை நியதியில் எழுதப்பட்டிருந்தது வெளிப்பட்டதும் அவர்கள் முற்றிலுமாக சீர்குலைந்து போய்விட்டார்கள். பிறகு எந்த அளவு சீர்குலைந்து போய்விட்டார்கள் என்றால், உள்ளத்திலுள்ள உறுதியும் முகத்திலிருந்த அந்த ஒளி ஆகிய எல்லாமே போய்விட்டது. மார்க்கத்தை துறந்து விட்டுச் செல்கின்ற இருள் வெளிப்பட்டது. முர்தத் ஆன பிறகு ஒரு நாள் லூதியானாவில் பீர் இஃப்திஹார் அஹ்மது சாஹிப் அவர்களின் வீட்டில் அவர்கள் என்னை சந்தித்தார்கள். அப்போது அவர்கள் என்னிடம் உங்களுக்கும் எங்களுக்குமிடையில் இவ்வாறு போட்டி நடத்தலாம். அதாவது ஓர் அறையில் நாம் இருவரும் அடைக்கப்பட வேண்டும். பத்து நாட்கள் வரை இவ்வாறு அடைக்கப்பட்டிருக்க வேண்டும். பிறகு பொய்யராக இருப்பவர் இறந்து விடுவார் என்று அவர் கூறினார். நான் அவரிடம் மீர் சாஹிப் ஷரீஅத்திற்கு மாற்றமான அத்தகைய சோதனைகளின் தேவை என்ன வந்து விட்டது? எந்தவொரு நபியும் இறைவனை சோதித்துப் பார்க்கவில்லை. ஆனால் என்னையும் உங்களையும் இறைவன் பார்த்துக் கொண்டிருக்கின்றான். அவன் சுயமே உண்மையாளர்களின் முன்னிலையில் பொய்யர்களை அழிப்பதற்கு வல்லமையுள்ளவனாக இருக்கின்றான். மேலும் இறைவனின் அடையாளங்கள் மழையைப் போன்று பொழிந்து கொண்டிருக்கின்றன. நீங்கள் உண்மையை வேண்டுபவராக இருந்தால் என்னுடன் காதியானுக்கு வாருங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். அதற்கு எனது மனைவி நோய்வாய்ப்பட்டுள்ளார். என்னால் அங்கு வர முடியாது என்று அவர் பதில் கூறினார். ஒருவேளை அவள், ஏதோ ஓரிடத்திற்கு சென்றிருக்கின்றார். எனக்கு நினைவில் இல்லை என்றும் அவர் பதில் கூறியிருக்கலாம். அதற்கு இப்போது இறைவனின் தீர்ப்பிற்காக கலந்து கொண்டிருங்கள் என்று நான் அவரிடம் கூறினேன். பிறகு அதே வருடத்தில் அவர்கள் வஃபாத்தாகி விட்டார்கள். எந்த அறையிலும் அவரை அடைத்து வைக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. எனவே, இது அஞ்ச வேண்டிய இடமாகும். அதாவது இறுதியில் அப்பாஸ் அலியின் முடிவு என்னவாக இருந்தது? இந்த அளவு முன்னேறிய பிறகு ஒரே நொடியில் வீழ்ச்சியின் படுகுழியில் அவர் விழுந்து விட்டார். அவரது நிலைமைகளில் இருந்து இந்த அனுபவம் நமக்கு கிடைத்திருக்கின்றது. அதாவது ஒரு நபர் தொடர்பாக இறைவன் அவரிடம் திருப்தியடைந்திருப்பதாக இல்ஹாம் வந்திருந்தாலும் கூட அந்த திருப்தியும் கூட ஒரு குறிப்பிட்ட காலம் வரையே இருக்கின்றது.☆ அதாவது, ஒருவர் இறை திருப்தியைப் பெறுகின்ற பணியைச் செய்கின்ற வரையில்தான் அது இருக்கின்றது. உதாரணமாக, இறைவன் திருக்குர்ஆனில் காஃபிர்கள் தொடர்பாக பல இடங்களில் அவர்கள் மீது தனது கோபத்தை வெளிப்படுத்தியிருக்கின்றான். மேலும் அவர்களில் எவராவது நம்பிக்கை கொண்டவராக ஆகிவிட்டால் உடனடியாக அந்த கோபம் கருணையாக மாறி விடுகின்றது. அவ்வாறே சில நேரங்களில் கருணை கோபமாக மாறி விடுகின்றது. இதன் காரணமாகவே ஹதீஸில் இவ்வாறு வருகின்றது. அதவாது ஒரு நபர் சுவர்க்கவாசிகளின் செயல்களைச் செய்கின்றார். எதுவரை என்றால், அவருக்கும் சுவர்க்கத்திற்கும் இடையில் ஒரு ஜான் அளவு வித்தியாசம் மட்டுமே எஞ்சியிருக்கின்றது. மேலும் உண்மையில் இறை நியதிக்கு ஏற்ப அவர் நரகவாசியாக இருக்கின்றார். இறுதியில் எத்தகைய ஒரு செயல் அல்லது எத்தகைய ஒரு கொள்கை அவரிடமிருந்து நிகழ்ந்து விடுகின்றது என்றால் அதனால் அவர் நரகத்தில் இடப்படுகின்றார். அவர் நரகவாசிகளின் செயல்களைச் செய்கின்றார். எதுவரையென்றால் அவருக்கும் நரகத்திற்கும் இடையில் ஒரு ஜான் அளவு வித்தியாசம் எஞ்சியிருக்கின்றது. இறுதியில் அந்த இறைவனின் விதி வெற்றி பெற்று விடுகின்றது. பிறகு அவர் நல்ல செயல்களைச் செய்ய ஆரம்பித்து விடுகின்றார். அந்நிலையிலேயே

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

☆ எனவே எல்லா நேரமும் ஓதுமாறு தொழுகையில் இந்த துஆவை இறைவன் கலந்து தந்துள்ளான். غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ مُنْعَمْ عَلَيْهِ مَغْضُوْبِ عَلَيْهِمْ அதாவது நாம் இறைவனின் அருட்கொடைகளை பெற்றவர்களாக ஆன பிறகு அவனது கோபத்திற்கு ஆளானவர்களாக நாம் ஆகிவிடக்கூடாது. எப்போதும் இறைவனின் தன்னிறைவுத் தன்மைக்கு அஞ்சிக் கொண்டிருக்க வேண்டும்.

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprieter Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

நான் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன் என்று வாதிக்கின்ற ஒரு நம்பிக்கையாளர், நம்மை அல்லாஹ் தன்னை வணங்குவதற்காகப் படைத்துள்ளான் என்ற கட்டளையை கவனத்தில் கொள்ள வேண்டும். பிறகு, அல்லாஹ் இறைவணக்கம் செய்யும் முறையைப் பற்றியும் கூறியுள்ளான். அதில் செயல் வழிமுறையும் பங்கும் உள்ளது. அதாவது வெளிப்படையான அசைவுகளும் அசையாமையும் உள்ளன. துஆவுக்கான வார்த்தைகளும் உள்ளன. அதனை திக்ர் என்றும் கூறலாம். தொழுகையில் இந்த இரண்டு விஷயங்களும் உள்ளன. அதாவது வெளிப்படையான அசைவுகளும், திக்ர்களும் அல்லது துஆக்களும் உள்ளன. ஆனால், தொழுகையை தவிர திக்ர்களும் துஆக்களும் உள்ளன. அதனை செய்வது நம்பிக்கையாளரின் பணியாகும்.

---

திருக்குர்ஆனில் பல்வேறு நபிமார்களைச் சான்று காட்டி நிறைய துஆக்களை அல்லாஹ் கூறியுள்ளான். அவற்றை நாம் தொழுகையிலும் ஓதலாம்.

> இன்று நான் கூற விரும்புவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தும் ஆகும். அல்லாஹ்விடம் இருந்து இறங்கிய துஆவும் ஆகும். அதன் பொருளை உணர்ந்து துஆ செய்வதனால் மனிதன் அல்லாஹ்வின் தவ்ஹீது குறித்த புரிதிறனையும் பெறுகின்றான். அதே வேளையில் அல்லாஹ்வின் அடைக்கலத்திலும் வருகின்றான். எல்லா வகை தீங்குகளிலிருந்தும் தப்பிக்கின்றான்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தினமும் இரவில் தூங்குவதற்கு முன் இந்த துஆவுடைய வசனங்களை ஓதுவது மட்டுமின்றி சஹாபாக்களுக்கும் ஓதி வருமாறு அறிவுறுத்தினார்கள். பல்வேறு இடங்களில் இந்த வசனங்களின், துஆக்களின் பலன்களைக் கூறியுள்ளார்கள்.

> நபிமொழிகளை மேற்கோளாகக் காட்டி ஆயத்துல் குர்ஸி, சூரா இக்லாஸ், சூரா ஃபலக், சூரா நாஸ் ஆகியவற்றின் சிறப்புகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் நடைமுறையின் ஒளியில் இந்த துஆக்களை முறையாக ஓதி வருமாறு ஹுஸூர் அவர்கள் கூறினார்கள்.

எந்தப் பணியை பெருமானார் (ஸல்) அவர்கள் தொடர்ந்து முறையாக செய்து வந்தார்களோ அது அன்னாரின் சுன்னத் ஆகும். இதனை ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வேண்டும். நாம் அஹ்மதி ஆவோம். இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தின் படி செயல்படுவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அதிகமாக வழிகாட்டியுள்ளார்கள். நாம் அதன் படி செயல்படுவதற்கு சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக நமது சொந்த ஆன்மீக உலகியல் நலன்களின் பக்கம் கவனம் செலுத்துவதுடன் ஜமாஅத் எதிர்கொள்கின்ற குழப்பங்கள் மற்றும் பொறாமைகள் மற்றும் எதிரிகளின் தீங்குகளில் இருந்து தப்பிப்பதற்கும் மிகவும் முக்கியமான கடமையாக இதனை கருதி இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

---

முஸ்லிம்களின் நிலைமை பரிதாபமாக இருக்கின்றது. அல்லாஹ் இவர்களுக்கு ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளான். ஒளிக்குப் பிறகு இருள்கள் மற்றும் இருள்களின் குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆக்களை தினமும் ஓதி வருமாறு கூறினார்கள். அதன் மூலம் தவ்ஹீதில் நிலை நில்லுங்கள் மற்றும் இருளிலிருந்து தப்புங்கள் என்றார்கள். ஆனால் முஸ்லிம்கள் இதனை பொருட்படுத்தவில்லை.

> இன்று உலகில் நாத்திகம் மிகவும் ஓங்கி உள்ளது. உலகமயம் சமூகத்தில் தனது கரத்தை எந்த அளவு வலுவுடன் பதித்துள்ளதென்றால் இதில் சில இளைஞர்கள் இதன் தாக்குதலுக்கும் உள்ளாகிறார்கள். இந்த துஆவை நாம் நம் மீது ஓதி ஊதுவதோடு நமது பிள்ளைகளின் மீதும் ஊத வேண்டும். அதன் மூலம் எல்லா வகையான தீமைகளிலிருந்தும் நமது பிள்ளைகளும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்கள் மார்க்கத்தில் நிலைநிற்பவர்களாகவும் ஏகத்துவத்தில் நிலைநிற்பவராகவும் ஆக வேண்டும்.

நம்மில் ஒவ்வொருவரும் இந்த சூராக்களில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்திற்கேற்ப அமல் செய்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக.

**சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்**
**16 பிப்ரவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **16 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ

أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. اِيَّاكَ نَعْبُدُ

وَ اِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

நான் இறைவன் மீது நம்பிக்கை கொண்டுள்ளேன் என்று வாதிக்கின்ற ஒரு நம்பிக்கையாளர், நம்மை அல்லாஹ் தன்னை வணங்குவதற்காகப் படைத்துள்ளான் என்ற கட்டளையை கவனத்தில் கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுவதுபோன்று وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنَ அதாவது, ஜின்களையும் மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

பிறகு, அல்லாஹ் இறைவணக்கம் செய்யும் முறையைப் பற்றியும் கூறியுள்ளான். அதில் செயல் வழிமுறையும் பங்கும் உள்ளது. அதாவது வெளிப்படையான அசைவுகளும் அசையாமையும் உள்ளன. துஆவுக்கான வார்த்தைகளும் உள்ளன. அதனை திக்ர் என்றும் கூறலாம். தொழுகையில் இந்த இரண்டு விஷயங்களும் உள்ளன. அதாவது வெளிப்படையான அசைவுகளும், திக்ர்களும் அல்லது துஆக்களும் உள்ளன. ஆனால், தொழுகையை தவிர திக்ர்களும் துஆக்களும் உள்ளன. அவற்றை செய்வது நம்பிக்கையாளரின் பணியாகும். திருக்குர்ஆனில் பல்வேறு நபிமார்களைச் சான்று காட்டி நிறைய துஆக்களை அல்லாஹ் கூறியுள்ளான். அவற்றை நாம் தொழுகையிலும் ஓதலாம். நடந்து செல்லும்போது திக்ராக ஓதலாம். மக்கள் தமது கடிதங்களில் எழுதுகிறார்கள். எங்களுக்கு இன்னின்ன கஷ்டங்கள் உள்ளன. இன்னின்ன பிரச்சனைகள் உள்ளன. நாங்கள் ஓதுவதற்காக ஏதாவது துஆக்களை கற்றுத் தாருங்கள். அதன் மூலம் எங்கள் கஷ்டங்கள் பிரச்சனைகளும் அகல வேண்டும் என்கின்றனர். அவ்வாறு கேட்பவர்களுக்கு பொதுவாக நான் எழுதுவது நீங்கள் தொழுகையில் கவனம் செலுத்துங்கள். ஸஜ்தாவில் துஆ செய்யுங்கள். தொழுகையில் துஆ கேளுங்கள். அல்லாஹ்விடம் உதவி தேடுங்கள் என்பதுதான். ஆனால் இன்று நான் கூற விரும்புவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சுன்னத்தும் ஆகும். அல்லாஹ்விடம் இருந்து இறங்கிய துஆவும் ஆகும். அதன் பொருளை உணர்ந்து துஆ செய்வதனால் மனிதன் அல்லாஹ்வின் தவ்ஹீது குறித்த புரிதிறனையும் பெறுகின்றான். அதே வேளையில் அல்லாஹ்வின் அடைக்கலத்திலும் வருகின்றான். எல்லா வகை தீங்குகளிலிருந்தும் தப்பிக்கின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தினமும் இரவில் தூங்குவதற்கு முன் இந்த துஆவுடைய வசனங்களை ஓதிவது மட்டுமின்றி சஹாபாக்களுக்கும் ஓதி வருமாறு அறிவுறுத்தினார்கள். பல்வேறு இடங்களில் இந்த வசனங்களின், துஆக்களின் பலன்களைக் கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த நடைமுறை குறித்து அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தினமும் தூங்கும்போது ஆயத்துல் குர்ஸி மற்றும் சூரா இக்லாஸ், சூரா ஃபலக், சூரா நாஸ் ஆகிய திருக்குர்ஆனின் கடைசி மூன்று சூராக்களையும் ஆயத்துல் குர்ஸியையும் மூன்று முறை ஓதி அதனை உடல் முழுவதும் தலையில் இருந்து கையினால் தொட முடிந்த இடம் முழுவதும் தடவுவார்கள். எந்த பணியை பெருமானார் (ஸல்)

அவர்கள் தொடர்ந்து முறையாக செய்து வந்தார்களோ அது அன்னாரின் சுன்னத் ஆகும். இதனை ஒவ்வொரு முஸ்லிமும் செய்ய வேண்டும். நாம் அஹ்மதி ஆவோம். இக்காலத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்தின் படி செயல்படுவதற்கு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் நமக்கு அதிகமாக வழிகாட்டி –யுள்ளார்கள். நாம் அதன்படி செயல்படுவதற்கு சிறப்பாக முயற்சி செய்ய வேண்டும். குறிப்பாக நமது சொந்த ஆன்மீக உலகியல் நலன்களின் பக்கம் கவனம் செலுத்துவதுடன் ஜமாஅத் எதிர்கொள்கின்ற குழப்பங்கள் மற்றும் பொறாமைகள் மற்றும் எதிரிகளின் தீங்குகளில் இருந்து தப்பிப்பதற்கும் மிகவும் முக்கியமான கடமையாக இதனை கருதி இதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். இந்த ஆயத்துகள் மற்றும் திக்ரின் முக்கியத்துவம் இன்னும் சில ஹதீஸ்களிலும் காண முடிகிறது. அதனை எடுத்து வைக்கிறேன். ஆயத்துல் குர்ஸி சம்பந்தமாக நான் இரண்டு வாரம் முன்பு கூறி விட்டேன். இன்று திருக்குர்ஆனின் கடைசி மூன்று சூராக்கள் குறித்து ஹதீஸ்களின் ஆதாரத்துடன் எடுத்து வைப்பேன். எவ்வாறு மீண்டும் மீண்டும் பல்வேறு கோணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், தமது சஹாபாக்களை இந்த சூராக்களை ஓதுவற்கு கவன மூட்டியுள்ளார்கள் என்று பாருங்கள்.

ஒரு அறிவிப்பில் கடைசி மூன்று 'குல்' சூராக்களையும் ஓதி உடலில் ஊதுவது குறித்து ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்: ஒவ்வோர் இரவும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் படுக்கையில் படுக்கும்போது தமது கைகளை சேர்த்து குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய மூன்று சூராக்களையும் எவ்வளவு ஓத முடியுமோ அவ்வளவு ஓதி இரு கைகளையும் உடலில் மீது தடவுவார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபு ஃபஸாயிலுல் குர்ஆன் பாபு ஃபஸ்லுல் முஅவ்விஸாத்) அன்னார் இரு கைகளையும் தலையிலிருந்து ஆரம்பித்து முகம் மற்றும் உடம்பில் கை செல்ல முடிந்த இடம் வரை மூன்று முறை தடவுவார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இதனை எவ்வளவு முறையாக செய்து வந்தார்கள் எனில் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கடைசி நோயின்போது தாமே அந்த துஆக்களை ஓதி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கைகளில் ஊதி அன்னாரின் கைகளைக் கொண்டே அன்னாரின் உடலில் தடவுவார்கள்.

ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நோயுற்றிருந்தால் பாதுகாப்பு தேடும் சூராக்களை ஓதி ஊதுவார்கள். அன்னாரது நோய் கடுமையானபோது நான் அந்த சூராக்களை ஓதி அன்னாரின் கைகளில் ஊதி பரக்கத்தை எதிர்பார்த்தவாறு அவர்கள் மீது தடவினேன். (சஹீஹ் புகாரி. கிதாபு ஃபஸாயிலுல் குர்ஆன் பாபு ஃபஸ்லுல் முஅவ்விஸாத்) ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களுக்கு இந்த எண்ணம் வந்ததற்கு காரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்ந்து இதனை செய்து வந்ததால்தான் அதன் பரக்கத்தின் முக்கியத்துவம் ஹஸ்ரத் ஆயிஷாவிற்கு தெளிவாக தெரிய வந்தது.

பிறகு சஹாபாக்களுக்கு எவ்வாறு அன்னார் கவனமூட்டினார்கள் என்று பார்த்தால், ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் அறிவிக்கிறார்: நான் ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்களைச் சந்தித்தேன். அன்னார் முன் வந்து என் கையைப் பற்றினார்கள். உக்பா பின் ஆமிரே! உமது தவ்ராத் இஞ்ஜீல், ஸபூர் மற்றும் குர்ஆன் போன்றவற்றில் இறக்கப்பட்டுள்ள சூராக்களில் மிகச் சிறந்த மூன்று சூராக்களைக் கூறட்டுமா! என்று கேட்டார்கள். நான், கூறுங்கள்; அல்லாஹ் என்னை உங்களிடம் அர்ப்பணிப்பானாக என்றேன். அன்னார் எனக்கு குல் ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய சூராக்களை ஓதிக் காண்பித்தார்கள். பிறகு, உக்பாவே! இவற்றை நீர் மறந்து விட வேண்டாம். இவற்றை ஓதாமல் எந்த இரவும் கழிய வேண்டாம் என்று கூறினார்கள். உக்பா கூறுகிறார்: அன்னார் என்னிடம் நீர் மறக்க வேண்டாம் என்று கூறியதிலிருந்து நான் அதனை மறக்கவில்லை. எந்த இரவிலும் அவற்றை ஓதாமல் நான் உறங்கியதில்லை. (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னது உக்பா பின் ஆமிர் தொகுதி 5 பக்கம் 895-896. பைருத்தில் அச்சிடப்பட்டது. 1998 ஆம் ஆண்டு பதிப்பு, ஹதீஸ் 17487) அன்னார் மறக்காதீர்; இதனை ஓதாமல் உறங்காதிர் என்று கூறியதில் இருந்து தெளிவாகத் தெரிவதாவது அன்னார் தாமும் முறைப்படி ஓதி வந்தார்கள். அல்லாஹ் உடைய கட்டளைகளை, விஷயங்களை எல்லாரையும் விட அதிகமாக அன்னாரே செயல்படுத்துபவராக இருந்தார்கள். அந்நிலையில் தான் அன்னார் மற்றவர்களுக்கும் அதனை கூறுபவர்களாக இருந்தார்கள்.

மேலும், சூரா இக்லாஸின் முக்கியத்துவம் குறித்து அதாவது குல் ஹுவல்லாஹு அஹத் என்று ஆரம்பிக்கின்ற சூரா பற்றி ஒரு ஹதீஸில் இவ்வாறு காணப்படுகிறது. ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் அறிவிப்பு செய்கிறார்கள்: ஒரு மனிதர் ஒருவரை மீண்டும் மீண்டும் குல் ஹுவல்லாஹு அஹத் ஓதக் கேட்டார். விடிந்ததும் அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து எல்லா விஷயத்தையும் கூறினார். அவர் அவ்வாறு ஓதிய மனிதரை சற்று குறைவாக கருதி அவரைப் பற்றி புகார் கூறும் விதத்தில் கூறினார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், 'எனது உயிர் எவனது கையில் உள்ளதோ அந்த இறைவன் மீது ஆணையாக! இது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதிக்கு சமமானதாகும் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபு ஃபஸாயிலுல் குர்ஆன் பாபு குல் ஹுவல்லாஹு அஹதுன்)

ஹஸ்ரத் அபூ ஸயீத் (ரலி) அவர்கள் இது சம்பந்தமாக இவ்வாறு விரிவாகக் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் நபி கரீம் (ஸல்) அவர்கள், தனது சஹாபாக்களிடம் கூறினார்கள். ஓர் இரவில் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதுவதற்கு முடியாதவர் எவரும் உள்ளனரா? ஒரே இரவில் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதுவது சஹாபாக்களுக்கு மிகவும் கஷ்டமாக தெரிந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சூரா இக்லாஸ் குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியாகும் என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபு ஃபஸாயிலுல் குர்ஆன் பாபு ஃபஸ்லுல் முஅவ்விஸாத்)

சூரா இக்லாஸ் திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாகும் என்று சஹீஹ் முஸ்லிமில் வருகிறது. ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள். நீங்கள் ஒன்று கூடுங்கள். நான் திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன். எல்லாரையும் ஒன்று கூட்டினார்கள். பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியில் வந்தார்கள். குல் ஹுவல்லாஹு அஹத் சூராவை ஓதினார்கள். பிறகு அன்னார் உள்ளே சென்றார்கள். சஹாபாக்கள் கூறுகின்றனர்: வானத்திலிருந்து ஏதாவது வஹி வந்திருக்கும். அதனால் உள்ளே சென்றிருப்பார்கள் என்று எங்களில் ஒருவர் கூறினார். பிறகு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியே வந்தார்கள். நான் உங்களிடம் திருக்குர்ஆனில் மூன்றில் ஒரு பகுதியை ஓதிக் காண்பிக்கிறேன் என்று கூறினேன். கவனமாக கேளுங்கள். அது சூரா இக்லாஸ் ஆகும். இது திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியாகும் என்று கூறினார்கள். (சஹீஹ் முஸ்லிம். கிதாபு ஸலாத்தில் முஸா.ஃபிரீன் வ கஸ்ருஹா பாபு ஃபஸ்லு கிராஅத் குல் ஹுவல்லாஹு அஹது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனை மூன்றில் ஒரு பகுதி என்று ஏன் கூறினார்கள்? அல்லாஹ் ஏகத்துவத்தை நிரூபிப்பதற்காகவும், அதனை நிலைநாட்டவும் திருக்குர்ஆனை இறக்கினான். இந்த சூராவில் மிகவும் தெளிவாகவும் ஒட்டுமொத்தமாகவும் தவ்ஹீது பற்றி கூறப்பட்டுள்ளது. அந்த வசனங்களை சிந்தித்து அதன்படி செயல்படுவதன் மூலமாக மனிதன் உண்மையான தவ்ஹீதின்படி செயல்பட முடியும். திருக்குர்ஆனை ஏக இறைவனின் வார்த்தை என்று கருதி செயல்பட முயற்சி செய்யும்போது உண்மையான தவ்ஹீதை புரிந்தவராகவும் அதனை நிலைநாட்டியவராகவும் ஒரு மனிதர் ஆகின்றார். திருக்குர்ஆனின் போதனையை முழுமையாக செயல்படுவதற்கும் வாய்ப்பு கிடைக்கும். சூரா இக்லாஸ் ஓதி விட்டேன். திருக்குர்ஆனின் மூன்றில் ஒரு பகுதியை ஓதி விட்டேன் என்று இருந்து விடக் கூடாது. அதன் பொருள், நீங்கள் அதை ஓதுங்கள். தவ்ஹீதின்படி செயல்படுங்கள் என்பதாகும்.

அதுபோன்று இன்னும் சில அறிவிப்புகளில் வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: இது நான்கில் ஒரு பகுதியாகும். இது நான்கில் ஒரு பகுதியாகும். இந்த சில வசனங்களை ஓதி விட்டு மக்கள் குர்ஆனை ஓதி விட வேண்டும் என்கின்றனர். அதே வேளையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுவதன் பொருள் என்னவெனில், இவை எத்தகைய விஷயங்கள் எனில் இவற்றின் படி நீங்கள் செயல்படுங்கள். பிறகு திருக்குர்ஆனின் மிக கவனம் செலுத்துங்கள். தவ்ஹீதை நிலை நாட்ட முயற்சி செய்யுங்கள். அப்போதுதான் நீங்கள் தவ்ஹீதை நிலைநாட்டியவர்கள் ஆவீர்கள். திருக்குர்ஆனின் போதனை என்ன? திருக்குர்ஆனின் போதனை தவ்ஹீதை நிலை நாட்டுவதற்கேயாகும். அதற்காக ஒவ்வொருவரும் முயற்சி செய்ய வேண்டும். துஆவும் செய்ய வேண்டும்.

பிறகு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் மூலமாக ஒரு அறிவிப்பில் வருகிறது: ஹஸ்ரத் ரஸூலே கரீம் (ஸல்) அவர்கள் ஒரு மனிதரை ஒரு போர்க் குழுவுக்கு அமீராக்கி அனுப்பினார்கள். அவர் தமது சகோதரர்களுக்கு தொழுகை நடத்தினார்கள். அவர் ஒவ்வொரு கிராஅத்தையும் குல் ஹுவல்லாஹு அஹத் சூராவை ஓதி முடித்தார்கள். சஹாபாக்கள் திரும்பி வந்த பிறகு அம்மக்கள் இதனை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கூறினர். அன்னார் அவர் அவ்வாறு செய்தாரா என்று கேளுங்கள் என்றார்கள். சஹாபாக்கள் கேட்டபோது, அவர், அதில் ரஹ்மானின் இறைவனின் பண்புகள் கூறப்பட்டுள்ளன. இதனால் நான் அதனை ஓத விரும்பினேன் என்றார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அவரிடம்

தெரிவியுங்கள். அல்லாஹ்வும் அவர் மீது அன்பு வைக்கிறான். (சஹீஹ் முஸ்லிம். கிதாபு ஸலாத்தில் முஸா.ஃ.பிரீன் வ கஸ்ருஹா பாபு ஃ.பஸ்லு கிராஅத் குல் ஹுவல்லாஹு அஹது)

பிறகு புகாரியில் ஹஸ்ரத் அனஸ் (ரலி) அவர்களுடைய ஒரு அறிவிப்பு வருகிறது: ஓர் அன்ஸார் சஹாபி குபாவின் மஸ்ஜிதில் தொழுகை நடத்தினார். எப்போது தொழுகை நடத்தினாலும் அவர் சூரா இக்லாஸ் ஓதினார்கள். அதனை ஓதி விட்டு வேறு சூராவும் ஓதுவார். ஒவ்வொரு ரக்அத்திலும் அவ்வாறே செய்வார். அவருடன் இருந்தவர்கள் அவரிடம், நீங்கள் சூரா இக்லாஸில் இருந்து ஆரம்பிக்கிறீர்கள். பிறகு அது மட்டும் போதும் என்றும் கருதுவதில்லை. அத்துடன் இன்னொரு சூராவும் ஓதுகிறீர்கள். ஒன்று சூரா இக்லாஸ் மட்டும் ஓதுங்கள் அல்லது வேறு ஏதாவது ஒரு சூரா மட்டும் ஓதுங்கள் என்று கூறினர். அதற்கு அவர், நான் இதனை ஒருபோதும் விட மாட்டேன். நீங்கள் விரும்பினால் நான் இவ்வாறே உங்களுக்கு இமாமத் செய்வேன். இல்லையெனில் நான் உங்களை விட்டு விடுகிறேன். அதாவது இமாம் செய்வதை விட்டு விடுகிறேன். ஆனால் அந்த சூராவை விட மாட்டேன் என்று கூறினார். அம்மக்கள் அவரை தங்கள் எல்லாரையும் விட சிறந்தவராகக் கருதினர். அவரை விட வேறு எவரும் தமக்கு இமாமத் செய்வதை அவர்கள் விரும்பவில்லை. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து இந்த சம்பவத்தை அவர்கள் கூறினர். அன்னார் அவரிடம், உம்மை குறித்து மக்கள் இவ்வாறு கூறுகின்றனர். அவ்வாறு அவர்கள் கூறுவதுபோன்று செய்வதில் இருந்து உம்மை தடுப்பது எது? என்று கேட்டார்கள். அதாவது, சூரா இக்லாஸ் ஓதாதீர்கள்; வேறு ஏதாவது சூரா ஓதுங்கள் அல்லது சூரா இக்லாஸ் மட்டும் ஓதுங்கள். வேறு சூரா ஓதாதீர்கள். இவ்வாறு இரண்டையும் ஓதுவதற்கு காரணம் என்ன? எதற்காக இந்த சூராவை ஒவ்வொரு ரக்அத்திலும் கண்டிப்பாக ஓதுகிறீர்கள்? என்று கேட்டார்கள். அதற்கு அவர், இந்த சூரா எனக்கு மிகவும் பிடித்தமானது என்று கூறினார். அதற்கு ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் இதன் மீதுள்ள அன்பு உம்மை சொர்க்கத்தில் சேர்த்து விட்டது என்று கூறினார்கள். (சஹீஹ் புகாரி. கிதாபுல் அதான் பாபுல் ஜம்உ பய்ன சூரதைனி ஃ.பிர்ரக்அதி)

பிறகு ஹஸ்ரத் உபய் பின் கஅப் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இணை வைப்பவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் கேட்டார்கள். உமது ரப் உடைய பரம்பரையைக் கூறுங்கள். அப்போது அல்லாஹ் குல் ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத் சூராவை இறக்கினான். ஸமத் என்பவன் யாருக்கும் தந்தை இல்லை. அவனுக்கும் தந்தை இல்லை. உலகில் பிறந்த பிறகு மரணம் இல்லாத ஒரு பொருளும் இல்லை. மரணிக்கின்ற ஒவ்வொன்றும் வாரிசின் தேவையில்லாமல் இல்லை. அல்லாஹ் அஸ்ஸவஜல் மரணிப்பவனும் இல்லை. அவனுக்கு வாரிசும் இல்லை. வலம் யகுல்லஹு குஃபுவன் அஹத். அவனுக்கு ஒப்பாக யாரும் இல்லை. அவனைப் போன்று யாரும் இல்லை. (சுனன் திர்மிதி அப்வாபு த.ஃ.ப்ஸீருல் குர்ஆனி அன் ரஸுலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம். பாபு வமின் சூரத்துல் இக்லாஸி)

பிறகு ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: மக்கள் ஒருவர் மற்றவரிடம் கேட்கிறார்கள். அல்லாஹ் ஒவ்வொரு பொருளையும் படைத்துள்ளான். பிறகு அல்லாஹ்வை எவன் உருவாக்கினான்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலத்திலும் இந்த கேள்வி கேட்கப்பட்டது. இன்றும் கூட இந்த கேள்வி கேட்கப்படுகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவ்வாறு கேட்கப்பட்டவர்களைப் பார்த்தால் குல் ஹுவல்லாஹு அஹத் சூராவை முழுமையாக ஓதுங்கள். அந்த சூராவை ஆய்வு செய்யுங்கள். பிறகு அல்லாஹ்வை படைத்தவன் ஒருவனும் இல்லை என்பது புரியவரும். அவன் ஆரம்பத்திலிருந்தே இருக்கிறான்; இருந்து கொண்டே இருப்பான். பிறகு அம்மனிதன் ஷய்த்தானிடமிருந்து அல்லாஹ்வின் பாதுகாப்புத் தேட வேண்டும். அப்போது அம்மனிதனுக்கு எந்த தீங்கையும் ஷய்த்தானால் விளைவிக்க இயலாது. (அல் இஹானதுல் குப்ரா லிஇப்னி பத்தா பாபு தரகஸ்ஸுவாலி அம்மா லா ய.ஃ.னி வல் பஅஸி வல் தன்கீர்)

ஹஸ்ரத் அபூஹுரைரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் வந்தேன். அன்னார் ஒருவரை குல் ஹுவல்லாஹு அஹத். அல்லாஹுஸ் ஸமத் சூராவை படித்துக் கொண்டிருக்கக் கண்டார்கள். பிறகு அன்னார் இவருக்கு கடமையாகி விட்டது என்றார்கள். எது கடமையாகி விட்டது என்று கேட்டபோது எந்த அளவு தூய கலப்பற்ற உள்ளத்துடன் அதனை அவர் எழுதுகின்றார் என்றால் அவர் மீது சொர்க்கம் கடமையாகி விட்டது என்றார்கள். (சுனன் திர்மிதி அப்வாபு த.ஃ.ப்ஸீருல் குர்ஆனி அன் ரஸுலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பாபு வமின் சூரத்துல் இக்லாஸி)

பிறகு சுஹைல் பின் சஅத் (ரலி) அவர்களின் அறிவிப்பு வருகிறது: ஒரு மனிதர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்தார். தமது ஏழ்மையைக் குறித்து முறையிட்டார். அன்னார் கூறினார்கள்: நீர் வீட்டில் நுழையும் போது அஸ்ஸலாமு அலைக்கும் கூறுங்கள். யாரும் இல்லையென்றாலும் உம் மீது ஸலாம் கூறிக் கொள்ளுங்கள். அஸ்ஸலாமு அலைக்கும் என்று கூறுங்கள். உமக்கு ஸலாம் கிடைக்கும். ஒருமுறை குல் ஹுவல்லாஹு அஹத் ஓதுங்கள். அம்மனிதர் அவ்வாறே செய்தார். அவருக்கு அல்லாஹ் எவ்வளவு ரிஸ்கை வழங்கினான் என்றால் அதிலிருந்து அக்கம் பக்கத்தவரும் கூட அருளைப் பெற்றனர். (ரூஹுல் பயானில் இஸ்மாயீல ஹக்கி பின் முஸ்த.ஃ.பா சூரா இஹ்லானின் வசனத்தின் கீழ் தொகுதி 10 பக்கம் 558. பைரூத்திலுள்ள குதுபுல் இல்மியாவில் 2003 -ல் வெளியிடப்பட்டது) அதாவது அல்லாஹ் பரக்கத்தான ரிஸ்கை வழங்கினான். ஒரு கட்டத்தில் அவர் கஷ்டத்தில் இருந்தார். பட்டினியாக இருந்தார். பிறகு அவர் எந்த அளவுக்கு வசதியாகி விட்டார் எனில் அக்கம் பக்கத்தவருக்கும் கூட அவர் உதவி செய்பவராகி விட்டார். ஆக, மனிதன் தவ்ஹீதின் பாடத்தைக் கற்க வேண்டும். அதன் படி செயல்பட வேண்டும். அல்லாஹ்வே எல்லா ஆற்றல்களும் உடையவன் என்பதை உணர வேண்டும். பிறகு அல்லாஹ் அவருக்கு அளவில்லாமல் வழங்குகிறான்.

அல்லாஹ் இன்னோரிடத்தில் கூறுகின்றான்: இறையச்சம் உள்ள ஒருவருக்கு அல்லாஹ் அவர் நினைத்துப் பார்த்திராத இடத்திலிருந்து உணவளிக்கிறான் என்று கூறுகின்றான். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்களிடமிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களிடம் ஒரு மனிதர் வந்தார். அவர், எனக்கு குல்ஹுவல்லாஹு அஹத் சூரா மிகவும் பிடித்தமானது என்றார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இந்த சூராவின் மீது உமக்கு இருக்கும் அன்பு உம்மை சொர்க்கத்தில் கொண்டு சேர்க்கும் என்று கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல். முஸ்னதுல் முகஸ்ஸிரீன மின் சஹாபதி முஸ்னது அனஸ் பின் மாலிக் ஹதீஸ் 12432)

பிறகு ஹஸ்ரத் ஜாபிர் (ரலி) அவர்களின் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் தினமும் **50** முறை குல்ஹுவல்லாஹு அஹத் ஓதினால் கியாமத் நாளில் அவரது கபரிலிருந்து அவர் எழுப்பப்படும்போது, எழுந்து சொர்க்கத்தில் நுழை என்று கூறப்படும். (அல்மு.ஃ.ஜமுல் அவ்ஸது பாபுல் யாமின் இஸ்முஹு ய.ஃ.கூப் ஹதீஸ் 9446)

இப்னு தைலமி அறிவிப்பில் இவ்வாறு வருகிறது: இவர் நஜ்ஜாஷி உடைய சகோதரியின் மகனாக இருந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சமூகத்தில் பணியும் செய்து வந்தார். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஒரு மனிதர் தொழுகையில் அல்லது அதை தவிர மற்ற நேரங்களில் **100** முறை குல்ஹுவல்லாஹு அஹத் ஓதி வந்தால் அவரை அல்லாஹ் நரக நெருப்பிலிருந்து விடுதலை செய்வதை கடடையாக்கிக் கொள்வான். (அல் மு.ஃ.ஜமுல் கபீர் லித்திப்ரானி தொகுதி 18 பக்கம் 331. பாபுல் லிக்கா ஃ.பிரோஸ்ஸு தெய்லமி ஹதீஸ் 852 அல்மக்தபதுஸ் ஸாபிலதி) இதுவே சூரா இக்லாஸின் முக்கியத்துவம் ஆகும். இதனை இரவில் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை மனதில் கொண்டு ஓதி வர வேண்டும். அல்லாஹ்வை ஒருவன் என்று கூறினால் அத்துடன் அவன் ஸமத் – தேவைகள் அற்றவன் என்ற அவனது அந்தஸ்தும் கூட நம் முன் வர வேண்டும். 'ஸமத்' என்பது எவரிடமும் எந்த தேவையும் அற்றதாகும். அது எப்போதும் முடிவடையாதது. அது ஒருபோதும் அழியாதது.

**M. Abdul Raoof**
✆ +91 9362 2272 29

SUCCESS INDIA
PROMOTERS

Coimbatore, Tamil Nadu
Mob : +91 9363 2272 27
Email: successraoof@gmail.com

**A.M. Zakir Hussain**
✆ +91 98429 41237

*METAPLAST*
DEALERS IN ALL KIND OF PLASTIC RAW MATERIAL & SCRAP

# 70-A, M.S. Nagar, Kurichi Pirivu,
Podanur Main Road, Coimbatore - 641023.

Ph : +91 422-2411124 Mob : 9364218000
Email : zakir@yahoo.com

Q4Q
Bamboo Village
MULTI CUISINE
RESTAURANT

Village Jn. Cherani, Manjeri, Malappuram Dt., Kerala
✆ 0483 276 77 96, 7592 911 164, 9048 774 811
9605 993 444, 9605 995 222
Email : www.q4qcaterers.com

ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இதனை இவ்வாறு கூறியுள்ளார்கள்: ஸமத் என்பது அவனைத் தவிர அனைத்தும் பிறக்கக் கூடியதாகும். பிறந்து பிறகு அவற்றிக்கு அழிவும் உண்டு. (பராஹீனே அஹ்மதிய்யா பக்கம் 433 அடிக்குறிப்பு த.ஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) தொகுதி எண் 4 பக்கம் 756) அல்லாஹ்வுடைய இருப்போ ஸமத் ஆகும். ஸமத் என்றால் மக்கள் தன்னிறைவு பெற்றவன் எனக் கருதுகின்றனர். தன்னிறைவு பெற்றவன் என்றால் அவன் அழியக் கூடியவன் அல்லன். அவனைப் போன்ற ஒரு பொருள் உருவாகவும் முடியாது. இதுவே நமது இறைவன் ஆவான். அவன் ஆதி தொட்டே இருந்தான்; இனியும் இருப்பான்.

அல்லாஹ் தனது சுயம் மற்றும் கம்பீரமாகிய பண்புகளின் ஏகனாவான். அவனுக்கு இணையில்லை. மற்ற அனைவரும் அவனது தேவையை உடையவர்கள். ஒவ்வோர் அணுவும் அவனிடமிருந்து வாழ்வைப் பெறுகின்றனர். அவனே ஒவ்வொரு பொருளின் ஆதாரம் ஆவான். அதாவது அவனே உலகின் பயன்படுபவன். அவன் யாரிடமிருந்தும் அருள் பெறுபவன் அல்லன். அவனுக்கு அருள் செய்பவன் எவனும் இல்லை. அவனே உலகிற்கு அருள் செய்கிறான். அவன் யாரது மகனும் இல்லை. அவனுக்கு மகனும் இல்லை. அவனைப் போன்று எதுவும் இல்லை. திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் இறைவனது முழுமையை எடுத்து வைத்து அவனது மகத்துவத்தை சுட்டிக் காட்டி கவனமூட்டியுள்ளது. பாருங்கள்! அந்த இறைவனே உள்ளங்களில் அச்சத்தை ஏற்படுத்தக் கூடியவன். மரணித்தவனோ பலவீனமானவனோ குறைந்த கருணை உள்ளவனோ மேலும் குறைந்த வல்லமையுள்ளவனோ அவ்வாறு இருக்க முடியாது. (இஸ்லாமி உஸுல் கீ ஃபிலாஸபி பக்கம் 103 த.ஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது அலைஹிஸ்ஸலாம் தொகுதி 4 பக்கம் 757)

சூரா இக்லாஸ், சூரா ஃபலக், சூரா நாஸ் ஆகிய சூராக்கள் இறங்கியது பற்றி ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இன்று இரவு எத்தகைய வசனங்கள் இறங்கின என்றால் இதற்கு முன்னர் அதுபோன்ற வசனங்களை இதற்கு முன் பார்க்க முடிந்ததில்லை. அது குல்ஹுவல்லாஹு அஹத், குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகும். (ஸஹீஹ் முஸ்லிம் கிதாபுஸ் ஸலாத்துல் முஸா.ஃபிரீன வ கஸ்ரிஹா பாபு.ஃபஸ்லுல் சிர்அதுல் முஅவ்விஸுன்)

பிறகு ஹதீஸில் மூன்று 'குல்' களையும் ஓதுவது குறித்து அறிவிப்பு வருகிறது. ஹஸ்ரத் உக்பா பின் ஆமிர் ஜொஹன்னி அறிவிக்கிறார்: நான் ஒருமுறை போர்ப் பயணத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சவாரியின் கயிற்றை பிடித்துக் கொண்டு சென்று கொண்டிருந்தேன்.

அன்னார் கூறினார்கள்: உக்பாவே! ஓதுவீராக. நான் அவர்கள் கூறுவதைக் கேட்டு ஓதுவதற்காக காதை அவர்கள் பக்கம் திருப்பினேன். சிறிது நேரம் கழித்து அன்னார் மீண்டும் உக்பா ஓதுவீராக என்றார்கள். பிறகு நான் என்ன ஓத வேண்டும்? என்று அவர்கள் பக்கம் திருப்பினேன். அன்னார் மீண்டும் மூன்றாவது முறையாக உம்பாவே ஓதுவீராக என்றார்கள். நான் என்ன ஓத வேண்டும்? என்று கேட்டேன்.

அதற்கு அன்னார் கூறினார்கள்: சூரா குல் ஹுவல்லாஹு அஹது கடைசி வரை ஓதினார்கள். பிறகு சூரா குல் அவூது பிரப்பில் ஃபலக் கடைசி வரை ஓதினார்கள். நானும் அவர்களுடன் ஓதி வந்தேன். பிறகு அன்னார் சூரா குல் அவூது பிரப்பின்னாஸ் கடைசி வரை ஓதினார்கள் . நானும் அவர்களுடன் ஓதினேன். பிறகு கூறினார்கள்: எந்த மனிதரும் இந்த அதிகாரங்கள் அல்லது வார்த்தைகளைக் கொண்டு இறைவனிடம் அடைக்கலத்தைப் பெற்றதில்லை. (சுனன் நஸயீ கிதாபுல் இஸ்திஆஸத் ஹதீஸ் 5430) அதாவது, இவை எத்தகைய வார்த்தைகளாகவும் துஆவாகவும் இருக்கின்றதென்றால் அதன் மூலமாக மனிதன் அல்லாஹ்வின் அடைக்கலத்தின் கீழ் வந்து விடுகின்றான். அவன் ஒருபோதும் வீணாவ –தில்லை. எல்லா தீமைகளிலிருந்தும் அவன் தப்பிக்கின்றான். அல்லாஹ்விடம் இதை விட சிறந்த முறையில் அவன் அடைக்கலத்தைப் பெற முடியாது. அதாவது அல்லாஹ்வின் அடைக்கலத்தை பெற இதுவே சிறந்த வழிமுறையாகும்.

பிறகு சூரா அந்நாஸ் பற்றி உக்பா பின் ஆமிர் (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்: நான் ஒரு முறை நபி (ஸல்) அவர்களுடைய சவாரியின் கடிவாளத்தைப் பற்றியவாறு நடந்து சென்றேன். அன்னார், உக்பா உமக்கு மிகவும் சிறந்த பயன்தரத்தக்க இரு சூராக்களைக் கூறட்டுமா? என்று கேட்டார்கள். யா ரஸூலல்லாஹ் ஏன் வேண்டாம்? கூறுங்கள் என்று உக்பா கூறினார். அன்னார், அவை குல் அவூது பிரப்பில் ஃபலக், குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகும் என்று கூறினார்கள். காலையில் சுபுஹ் தொழுகையில் இந்த இரண்டு சூராக்களையும் ஓதினார்கள். தொழுத பிறகு என்னிடம் கூறினார்கள். உக்பாவே! என்ன பார்க்கிறீர்? என்று கேட்பார்கள். (சின்ன சூராவை ஓதியதால் அவ்வாறு கேட்டிருக்கலாம். பிறகு கூறினார்கள். இதில் எல்லாமே இருக்கின்றது.) (சுனன் அபூதாவூது அப்வாபுல் வித்ர் பாபு.ஃபில் முஅவ்விஸதைன் ஹதீஸ் 1462)


ஓர் அறிவிப்பில் வருகிறது: அபூஸயீது அறிவிப்பின்படி ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் ஜின்களின் பார்வையிலிருந்தும் மனிதர்களின் பார்வையிலிருந்தும் அடைக்கலம் தேடி வந்தார்கள். பாதுகாப்பு தேடும் இரு சூராக்கள் (அல் பலக், அன்னாஸ்) இறங்கியதும் அந்த சூராக்களையே ஓதினார்கள். பாதுகாப்பிற்காக ஓதி வந்த மற்றவற்றை விட்டு விட்டார்கள். (சுனன் இப்னி மாஜா கிதாபுத் திப். பாபு மனிஸ் தர்கீ மிஅல் அய்ன். ஹதீஸ் எண்: 3511)

ஹஸ்ரத் இப்னு ஆபிஸ் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு முறை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: இப்னு ஆபிஸே! மிகச் சிறந்த பாதுகாப்பு சூராவைக் கூறவா எனக் கேட்டார்கள். அதன் மூலமாக பாதுகாப்புத் தேடுபவர் பாதுகாப்பு தேடுகிறார். நான் கேட்டேன். யா ரஸூலல்லாஹ் ஏன் வேண்டாம்? கூறுங்கள். அது சூரா ஃபலக், சூரா நாஸ் ஆகும் என்று அன்னார் கூறினார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 5 பக்கம் 322)

பிறகு கடைசி இரு சூராக்களின் முக்கியத்துவத்தை விளக்கியவாறு ஒரு சஹாபி கூறுகிறார்: ஒரு முறை நாங்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் பயணத்தில் இருந்தோம். சவாரி செய்யும் விலங்குகள் குறைவாகவே இருந்தனர். முறை வைத்து சவாரிகளில் ஏறிக் கொண்டோம். ஒருமுறை நான் இறங்க வேண்டிய முறையாக இருந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல) அவர்கள் பின்னால் இருந்து அருகில் வந்து எனது தோள்களில் கையை வைத்து அவூது பிரப்பில் ஃபலக் ஓதுங்கள் என்றார்கள். நான் அவற்றை கூறினேன். நான் ஓதியதுபோன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அதனை முழுமையாக ஓதினார்கள். நானும் கூடவே ஓதினேன். பிறகு குல் அவூது பிரப்பின்னாஸ் ஓதுமாறு கூறினார்கள். முழு சூராவையும் அவர்கள் ஓதினார்கள். நானும் ஓதினேன். பிறகு, நீங்கள் தொழுதால் தொழுகையில் இந்த இரு சூராக்களையும் ஓதுங்கள் என்றார்கள். (முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 6 பக்கம் 918 ஹதீஸ் எண் 21025)

உக்பா பின் ஆமிர் ஜொஹன்னி (ரலி) அவர்களிடமிருந்து ஓர் அறிவிப்பில் வருகிறது: நான் ஒரு பயணத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடன் இருந்தேன். ஃபஜ்ர் நேரம் ஆரம்பமானதும் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் பாங்கு கூறினார்கள். பிறகு இகாமத்தும் கூறினார்கள். என்னை தமது வலப்புறத்தில் நிறுத்திக் கொண்டு இரு பாதுகாப்புத் தேடும் சூராக்களையும் ஓதினார்கள். தொழுது முடித்ததும், என்ன பார்த்தீர் என்று கேட்டார்கள். (இதுவும் முதலில் சொன்ன அறிவிப்பிற்கு ஒத்ததாகவே உள்ளது.) நான் கூறினேன். நான் ஆய்வு செய்து பார்த்தேன் என்றேன். அன்னார் கூறினார்கள்: இந்த இரு சூராக்களையும் ஓதி விட்டு உறங்குங்கள். நீங்கள் விழித்தெழுகின்ற போதும் இந்த இரண்டு சூராக்களையே ஓதுங்கள் என்று கூறினார்கள். (அல் முஸன்னி.ஃப்.ஃபில் அஹாதீஸ் வல் ஆஸாரி அஸ் அபூபக்ர் இப்னு அபீ ஷேய்பது தொகுதி 1 பக்கம் 403 கிதாபுஸ் ஸலவாத்தி மன் கான யக.ஃபி.ஃபுல் கிர்அத்துஸ் ஸ.ஃபரி ஹதீஸ் 3888) இதுவே இந்த சூராக்களின் முக்கியத்துவம் ஆகும்.

இக்காலத்தில் இந்த சூராவை ஓதும் அவசியம் இன்னும் அதிகமாகி விட்டது. தனிப்பட்ட

O.A.N. NIJAM 99947 57172 V.A. SAIT 99430 30230
O.A.N. DOORS & STEELS

All Types of wooden Doors, Skin Doors Steal Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Construction Chemicals.
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram, (opp. Karuna Clinic) Tirunelveli - 627 005.

ALIF AUTO CARE
Pudupet, Chennai.
Ph: 98847 74525

CITY HARDWARE STORE'S
Chrompet, Chennai - 600 044.
Ph : 044-22655219

ரஹ்மானியா
மேல்நிலைப் பள்ளி
தொடக்கப் பள்ளி
மெட்ரிகுலேஷன் பள்ளி
மேலப்பாளையம், திருநெல்வேலி.
S.S. அஸன் அபூபக்கர்
✆ 94869 37769

முறையில் நமது ஆன்மீக முன்னேற்றம் மற்றும் ஷைத்தானிய தாக்குதல்களிலிருந்து தப்பிப்பதற்கும், ஜமாஅத் அளவில் இஸ்லாத்திற்கு எதிரான சூழ்ச்சிகளிலிருந்து தப்பிக்கவும், தற்போது இஸ்லாத்திற்கு எதிராக எதிரிகளின் முயற்சிகள் மிகவும் விழிப்புடன் நடந்து கொண்டிருப்பதாலும், மறுபுறம் பெயர் தாங்கி ஆலிம்கள் மற்றும் முஸ்லிம் தலைவர்கள் ஏற்படுத்திய குழப்பங்களிலிருந்தும் கிளர்ச்சிகளிலிருந்தும் தப்பிக்கவும், இவர்கள் பொதுமக்களை தூண்டி விட்டு இஸ்லாமிய எதிர்ப்பு சக்திகளுக்கு இன்னும் அதிகமாக வாய்ப்பு வழங்கி அவர்களின் கைகளை வலுப்படுத்துகின்ற அவர்களிடமிருந்து தப்பிக்கவும், நாத்திகயம் தற்போது கடுமையாக ஓங்கியுள்ளதாலும் இந்த அடிப்படையில் சூரா ஃபலக் மூலம் துஆ வேண்ட வேண்டும்.


ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இவ்வாறு ஓரிடத்தில் இதற்கு விளக்கம் கூறுகின்றார்கள்: நீங்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய எதிரிகளால் இலக்காக்கப் –பட்டால் இவ்வாறு துஆ செய்யுங்கள். உட்புறமாகவும் வெளிப்புறமாகவும் எதிரியாக இருக்கின்ற படைப்பினங்களின் தீங்கை விட்டும் இறைவனின் பாதுகாப்பை வேண்டுகின்றேன். காலைப் பொழுதின் இறைவனிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். அதாவது வெளிச்சத்தை வெளிப்படுத்துவது அவனது கையில் உள்ளது. இது ஆன்மீக வெளிச்சமாகும். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது வருகையின் மூலம் வெளி வந்துள்ளது. நான் இருள் நிறைந்த இரவின் தீங்கிலிருந்தும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூதை மறுப்பதனால் ஏற்படும் குழப்பத்தின் இரவில் இருந்து இறைவனிடம் பாதுகாப்புத் தேடுகிறேன். (துஹ்ஃபா கோல்டுவிய்யா பக்கம் 78 தஃப்ஸீர் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது அலைஹிஸ்ஸலாம் தொகுதி எண் 4 பக்கம் 762) ஒருபுறம் இஸ்லாத்தின் எதிரிகள். அவர்கள் இஸ்லாத்தின் போதனைகளை ஆட்சேபனை செய்கின்றனர். மற்றொருபுறம் இஸ்லாமிய ஆலிம்கள். இவர்கள் தமது தவறுகளை விட விரும்புவதில்லை. மஸீஹ் மவ்வூதுக்கு எதிராக மக்களைத் தூண்டுவதில் மும்முரமாக இருக்கிறார்கள். இதில் பாகிஸ்தானில் ஆலிம்கள் முதலில் இருக்கிறார்கள். இதில் பாகிஸ்தானிய ஆலிம்கள் முதலில் இருக்கிறார்கள். இந்நிலையில் பாகிஸ்தானிய அஹ்மதிகள் குறிப்பாக இந்த சுன்னத்தை தொடர்வது அவசியமாகும்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: சூரா ஃபலகில் ஸர்ரி காஸிகின் இதா வகப் என்று வருகிறது. இது இருள் நிறைந்த இரவில் குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்கு துஆ வேண்டப்பட்டுள்ளது. காஸிக் எல்லாவற்றையும் மூடி விடுகின்ற இருளிற்குக் கூறப்படும். இந்த இருள் நிறைந்த இரவில் குழப்பம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூதை மறுக்கும் குழப்பத்தை தொடர்ந்து வருகிறது. இவற்றிலிருந்து பாதுகாப்பு வேண்டப்பட்டுள்ளது. முஸ்லிம்களின் நிலைமை பரிதாபமாக இருக்கின்றது. அல்லாஹ் இவர்களுக்கு ஒரு துஆவை கற்றுத் தந்துள்ளான். ஒளிக்குப் பிறகு இருள்கள் மற்றும் இருள்களின் குழப்பத்திலிருந்து தப்பிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த துஆக்களை தினமும் ஓதி வருமாறு கூறினார்கள். அதன் மூலம் தவ்ஹீதில் நிலை நில்லுங்கள் மற்றும் இருளிலிருந்து தப்புங்கள் என்றார்கள். ஆனால் முஸ்லிம்கள் இதனை பொருட்படுத்தவில்லை. முஸ்லிம்கள் பெரும்பாலார் இந்த இருளில் மூழ்கிக் கொண்டிருக்கிறார்கள். இதனால் இன்று முஸ்லிம்கள் முஸ்லிம் அல்லாதவர்களால் ஆட்சேபனைக்கு உள்ளாகிறார்கள். முஸ்லிம்களின் இந்த நிலை நமக்கு கவனமூட்டுவது இந்த சூராவை நாம் ஆய்வு செய்து ஓத வேண்டும் என்பதாகும். அதன் மூலம்தான் நாம் இந்த இருளிலிருந்து தப்பிக்க முடியும். ஷர்ரின் நஃப்பாஸாத்தி ஃபில் உகத் – முடிச்சுகளின் தீங்கிலிருந்தும் அவர்கள் இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்திற்கு எதிராக பெரிய வழிமுறைகள் மூலம் மக்களின் உள்ளங்களில் காழ்ப்புணர்ச்சியை உருவாக்குகிறார்கள். இதில் நான் கூறியதுபோன்று முஸ்லிம் அல்லாதவர்களும், பெயர் தாங்கி இஸ்லாமிய ஆலிம்களும் அடங்குவர். ஒரு பிரிவினர் மார்க்கத்திற்கு எதிராக இருப்பதன் காரணமாக தமது காரியங்களை செய்கின்றனர். முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்திற்கு எதிராக போனதால் இதனை செய்கின்றனர். இன்னொரு பிரிவினர் மார்க்கத்தின் பெயரால் இறைவனால் அனுப்பப்பட்டவருக்கு எதிராக மக்களை தூண்டி இந்தப் பணிகளைச் செய்கின்றனர். இந்த இருவரும் இதில் அடங்குவர். வமன் ஷர்ரின் னஃப்பாஸாத்தி ஃபில் உகத் –இல் அடங்குவர்.


பிறகு சூரா நாஸில் அல்லாஹ்வின் ருபூபிய்யத் – பரிபாலிப்பவன், மாலிக்கிய்யத் – எஜமானன் மற்றும் உண்மையான வணக்கத்திற் –குரியவன் ஆகிய பண்புகள் விளக்கப்பட்டுள்ளன. இவற்றை கூறி ஷைத்தானுடைய தீங்குகளிலிருந்து பாதுகாப்பு வேண்டுமாறு கூறுகின்றது. இன்று உலகில் நாத்திகம் மிகவும் ஓங்கி உள்ளது. உலகமயம் சமூகத்தில் தனது கரத்தை எந்த அளவு வலுவுடன் பதித்துள்ளதென்றால் இதில் சில இளைஞர்கள் இதன் தாக்குதலுக்கும் உள்ளாகிறார்கள். இந்த துஆவை நாம் நம் மீது ஓதி ஊதுவதோடு நமது பிள்ளைகளின் மீதும் ஊத வேண்டும். அதன் மூலம் எல்லா வகையான தீமைகளிலிருந்தும் நமது பிள்ளைகளும் பாதுகாப்பாக இருக்க வேண்டும். அவர்கள் மார்க்கத்தில் நிலைநிற்பவர்களாகவும் ஏகத்துவத்தில் நிலைநிற்பவராகவும் ஆக வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் இந்த சூராக்களில் கூறப்பட்ட கருத்தை உணர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய சுன்னத்திற்கேற்ப அமல் செய்பவர்களாக அல்லாஹ் நம்மை ஆக்குவானாக. இறைவனது ஏகத்துவத்தின் கருத்து நம்மீது தெளிவாகட்டுமாக. அவனைத் தவிர வேறு யாருக்கு முன்னும் நாம் குனியாதவர்களாக இருப்போமாக. அவனையே எல்லா சக்திகளின் தலையூற்றாகக் கருதுவோமாக. உள்ளத்தால் மட்டுமின்றி நமது செயலால் அதனை நிரூபிப்போமாக. அல்லாஹ்வே எல்லா ஆற்றல்களின் தலையூற்று என்றும், ஒவ்வொரு ஒளியின் மூலதாரம் என்றும், ஒவ்வொரு அருளையும் வழங்குபவன் என்றும் நிரூபிப்போமாக. படைப்பினங்களின் தீங்கிலிருந்து தப்பிப்பதற்கு அல்லாஹ்வின் முன் குனியுங்கள். படைக்கப்பட்ட பொருள்களின் மீது நம்பிக்கை வைக்க வேண்டாம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு எந்த ஒளியை பெற்றுள்ளோமோ எது ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய உண்மையான ஒளியின் பிரதிபிம்பமோ அதில் நம்மை அல்லாஹ் என்றும் நிலைத்து நிற்க வைப்பானாக. நாம் எப்போதும் இருளில் தடுமாறுபவர்களாக ஆகாமல் இருப்போமாக.

அல்லாஹ்விடமிருந்து கிலாஃபத் உடைய வெகுமதி நமக்கு கிடைத்துள்ளது. அத்துடன் எப்போதும் தொடர்புடன் இருப்போமாக. ஒவ்வொரு சேதம் ஏற்படுத்தும் தீமையிலிருந்தும் நம்மை தனது பாதுகாப்பில் வைப்பானாக. அது மார்க்க ரீதியிலான தீங்காக இருந்தாலும் சரி, உலகியல் ரீதியாக தீங்காக இருந்தாலும் சரி, ஒவ்வொரு பொறாமைக்காரரின் பொறாமையின் தீங்கிலிருந்தும் அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக. இறைவனையே நாம் நமது ரப் – பராமரிப்பவனாகக் கருதி அவனது அடைக்கலத்தில் இருப்போமாக. எல்லா மன்னர்களுக்கும் மன்னனாக இறைவனையே கருதுவோமாக. அவனது அரசாட்சியின் கீழ் முழுமையான நிச்சய உறுதி கொள்வோமாக. அந்த உண்மையான வணக்கத்திற்குரியவன் வணங்கும் உரிமையை நிறைவேற்றியவாறு எப்போதும் அவனது அடைக்கலத்தைப் பெற முயற்சி செய்வோமாக. குழப்பம் ஏற்படுத்துபவர் –களின் தீங்கிலிருந்து பாதுகாக்கப்படுவோமாக. இதிலிருந்து அல்லாஹ்வின் பாதுகாப்பில் வருவோமாக. உங்கள் உள்ளங்களை எல்லா குழப்பங்களிலிருந்தும் தூய்மையாக்க முயற்சி செய்யுங்கள். அதற்காக இறைவனது அடைக்கலத்தைத் தேடுங்கள். அல்லாஹ் அதற்கான வாய்ப்பினை வழங்குவானாக. முறையாக தூங்குவதற்கு முன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய கட்டளைக்கேற்ப இந்த வசனங்களை ஓதி அதனை நம் மீது ஊதிக் கொள்வோமாக. அல்லாஹ் அதற்கான நல்வாய்ப்பினை நமக்கு வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

B. Mohamed Adil
✆ 93632 06679
99433 38000

National Watch Company
Sales & Service
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

halal Grill house
multi cuisine family restaurant
Thennampalayam, Near 'Centi Win' Company,
Palladam Road, Tirupur.
Ph : 8220 690 222, 8220 691 222

93600 05888
78716 00664
IBR
Construction Materials

எங்களிடம் கட்டடத்திற்கு தேவையான சிமெண்ட், செங்கல், மணல், ஜல்லி, கிராவல், மெட்டல், ஹாலோபிளாக் மற்றும் அனைத்து பொருட்களும் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.
சுப்புலட்சுமி நகர், நிர்மலா மாதா ஸ்கூல் ரோடு, குனியமுத்தூர், கோவை–5.

# ஜுமுஆ பேருரை

இன்றைய நாட்களில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் முஸ்லிஹ் மவ்ஊது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடப்படுகிறது. 20 பிப்ரவரி என்பது எத்தகைய தினம் என்றால் அன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தமக்கு பிறக்கப்போகின்ற ஒரு மகனைப் பற்றி முன்னறிவித்திருந்தார்கள். இது குறித்து ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தார்கள். அதில் அவரைப் பற்றி அவரது பல சிறப்புகள் கூறப்பட்டிருந்தன. அந்த பிரசுரம் 20 பிப்ரவரி 1886 அன்று வெளியிடப்பட்டது. நான் ஏற்கனவே கூறியதுபோன்று வசதிக்கேற்ப 20 பிப்ரவரி அன்று முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடப்படுகிறது. அந்த தினத்தில் கொண்டாட வசதிப்படாத இடங்களில் சற்று முன் பின் நாட்களில் கொண்டாடப்படுகிறது. முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடுவது, அதன் அடிப்படையில் கூட்டம் நடத்துவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஒரு மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறியதற்காகவே ஆகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்று பிறந்தார்கள் என்பதற்காக அல்ல.

---

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுடைய முன்னறிவிப்பு தொடர்பாக ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள். இந்த முன்னறிவிப்பு பற்றி எடுத்துக் கூறும்போது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது (ரலி) அவர்களே இதற்கு பொருந்தக் கூடியவர்களாக இருக்கின்றார்கள் என்பதைப் பற்றி ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள், ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் மற்றும் ஏனைய சில பெரியவர்களின் அறிவிப்புகளை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

சுயமே ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கேற்ப இந்த முன்னறிவிப்பை மெய்ப்பிக்கக் கூடியவனாக நான் இருக்கின்றேன் என்று அறிவிப்பு செய்தார்கள்.

இந்த முன்னறிவிப்பில் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தவாதி தொடர்பாக என்ன அடையாளங்கள் குறிப்பிடப்பட்டிருந்தனவோ அது அன்னாரின் இருப்பில் மிகவும் மகிமையுடன் நிறைவேறி விட்டது. இந்த அம்சத்தை விளக்கும் வகையில் நம்மவர்கள் மற்றும் அந்நியர்களில் சிலரும் கூட அதை ஏற்றுக் கொண்டு அதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளவற்றை ஹுஸூர் அவர்கள் எடுத்துக் கூறினார்கள்.

---

தற்போது இந்த கூட்டங்களில் இது சம்பந்தமான முன்னறிவிப்புகளைக் கேட்டு நாம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்ஊது (ரலி) அவர்களுடைய தகுதிகள் உயர்த்தப்படுவதற்காக துஆ செய்ய வேண்டும். அத்தோடு நாம் நம்மையும் ஆய்வு செய்ய வேண்டும். அஹ்மதிகள் ஒவ்வொருவரும் ஓர் உறுதியுடன் அஹ்மதிய்யத்திற்காக தமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்துவது அவசியமாகும். இதனை நாம் செய்தால் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் நம் வாழ்விலேயே முன்பை விட அதிகமாக ஏற்படுவதை நாம் பார்ப்போம். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

---

சய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில்** **23 பிப்ரவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **தப்லீக்** மாதம் **23 -ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِينَ. الرَّحْمٰنِ الرَّحِيمِ. مٰلِكِ يَوْمِ الدِّينِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِينُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ. صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ.

இன்றைய நாட்களில் ஜமாஅத் நிலைநாட்டப்பட்டுள்ள இடங்களில் எல்லாம் முஸ்லிஹ் மவ்ஊது பற்றிய முன்னறிவிப்பின் அடிப்படையில் முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடப்படுகிறது. 20 பிப்ரவரி என்பது எத்தகைய தினம் என்றால் அன்று ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்கள் இறைவனிடமிருந்து செய்தியைப் பெற்று தமக்கு பிறக்கப்போகின்ற ஒரு மகனைப் பற்றி முன்னறிவித்திருந்தார்கள். இது குறித்து ஒரு பிரசுரம் வெளியிட்டிருந்தார்கள். அதில் அவரைப் பற்றி அவரது பல சிறப்புகள் கூறப்பட்டிருந்தன. அந்த பிரசுரம் 20 பிப்ரவரி 1886 அன்று வெளியிடப்பட்டது.

நான் ஏற்கனவே கூறியதுபோன்று வசதிக்கேற்ப 20 பிப்ரவரி அன்று முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடப்படுகிறது. அந்த தினத்தில் கொண்டாட வசதிப்படாத இடங்களில் சற்று முன் பின் நாட்களில் கொண்டாடப்படுகிறது. முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடுவது, அதன் அடிப்படையில் கூட்டம் நடத்துவது, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய ஒரு மகத்தான முன்னறிவிப்பு நிறைவேறியதற்காகவே ஆகும். ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் அன்று பிறந்தார்கள் என்பதற்காக அல்ல. இதனை நான் தெளிவுபடுத்தக் காரணம் தற்போதைய புதிய தலைமுறையைச் சார்ந்தவர்கள் அல்லது குறைமதியாளர்கள் முஸ்லிஹ் மவ்ஊது தினம் கொண்டாடுகிறோம். பிறகு மற்ற கலீஃபாக்களின் பிறந்த நாளை ஏன் கொண்டாடுவதில்லை என்கின்றனர். ஒன்றை தெளிவாக விளங்க வேண்டும். இந்த நாள் முஸ்லிஹ் மவ்ஊது பிறந்த நாள் அல்ல. அன்னார் பிறந்தது 1889 ஆம் ஆண்டு ஜனவரி 12 ஆம் தேதி ஆகும். இந்த தெளிவிற்குப் பிறகு நாம் இந்த முஸ்லிஹ் மவ்ஊது பற்றிய முன்னறிவிப்பு பற்றி கூறுவேன்.

முதலில், ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய வார்த்தைகளில் நான் அதனைக் கூறுவேன். அது அவர்களின் எழுத்துக்களிலிருந்து நிரூபணமாகிறது. அன்னார் இந்த முன்னறிவிப்பில் கூறப்பட்டவர் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூத் அஹ்மது ஆகிய இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் என்றுதான் கருதியிருந்தார்கள். முதல் கலீஃபத்துல் மஸீஹின் கருத்து அவ்வாறே இருந்தது. இந்த முன்னறிவிப்பில் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ்தான் என்று மற்ற சில பெரியவர்களும் அவ்வாறே கருதி இருந்தனர். அது போன்றே அன்னாருக்கு பல சிறப்பம்சங்கள் இருந்தன. அந்த அடையாளங்கள் நிறைவேறியதை நம்மவரும் மற்றவரும் குறிப்பிட்டுள்ளார்கள்; உணர்ந்தும் இருந்தார்கள். அது சம்பந்தமாக சில சான்றுகளை எடுத்து வைக்கிறேன்.

முதலில் இது சம்பந்தமான முன்னறிவிப்பு, ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் வார்த்தைகளில் இவ்வாறு உள்ளன. முன்னறிவிப்பு இந்த எளியவன் தொடர்பாக 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதி ஹிஜ்ரி 15 ஜமாதில் அவ்வல் ஆகிய இன்று இதில் கூறப்பட்டபடி இல்ஹாமிய வசனம் எடுத்து வைக்கப்படுகிறது. பிறகு விரிவாக பத்திரிகையில் எழுதப்படும் – இன்ஷா அல்லாஹ்.

முதலாவதாக, அல்லாஹ் மகத்துவமிக்க கருணையாளனான எல்லாவற்றின் மீதும் ஆற்றல் பெற்றவனுமான அல்லாஹ் அவனது பெயர் மகத்தானது. அவன் எனக்கு இல்ஹாம் மூலமாக கூறினான்:

நீர் என்னிடம் கேட்டதற்கிணங்க நான் அருளின் ஓர் அடையாளத்தை உமக்குத் தருகின்றேன். நான் உமது மன்றாடல்களை செவியுற்றேன். மேலும் நான் என் அருள்களால் உமது துஆக்களை ஏற்றுக் கொண்டேன். (லூதியானா, ஹோஷ்யார்பூரை நோக்கி நீர் மேற்கொண்ட) உமது பயணத்தை உமக்கு அருளுக்குரியதாக ஆக்கினேன். எனவே ஆற்றல், அருள், இறை நெருக்கம் ஆகிய அடையாளங்கள் உமக்கு அளிக்கப்படுகின்றன. அருள், பேரருள் ஆகிய அடையாளங்கள் உமக்கு வழங்கப்படுகின்றன. வெற்றி வாகையின் திறவுகோல் உமக்கு கிடைக்கிறது. வெற்றி பெற்றவரே! உம்மீது சாந்தி உண்டாவதாக. வாழ்க்கையை விரும்புபவர்கள் மரணத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காகவும், கல்லறைகளில் அமுங்கிக் கிடப்பவர்கள் வெளியில் வருவதற்காகவும் இறைவன் இதை கூறி இருக்கிறான். மேலும் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பு, அல்லாஹ்வுடைய வார்த்தையின் அந்தஸ்து

மக்களுக்கு வெளிப்படுத்துவதற்காகவும், உண்மை தனது எல்லா அருள்களுடனும் வந்து விடுவதற்காகவும், பொய் தனது அனைத்து தீய சகுனங்களுடனும் வெருண்டோடி விடுவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

மேலும் நான் ஆற்றல் மிக்கவன் எனவும், விரும்பவுதை செய்கின்றேன் எனவும் மக்கள் புரிந்து கொள்ளட்டும். நான் உம்முடன் இருக்கிறேன் என அவர்கள் உறுதி கொள்ளட்டும். மேலும் எவர்கள் இறைவனுடைய இருப்பு பற்றி நம்பிக்கை கொள்வதில்லையோ, மேலும் இறைவனுடைய மார்க்கத்தையும், அவனுடைய வேதத்தையும் அவனுடைய தூய தூதர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களையும் மறுத்தல் மற்றும் பொய்ப்படுத்துதல் என்ற பார்வையுடனும் பார்க்கிறார்களோ அவர்களுக்கு ஓர் அடையாளம் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும், குற்றவாளிகளின் வழியை வெளிப்படுத்துவதற்காகவும் இறைவன் இதைக் கூறியுள்ளான்.

எனவே உமக்கு ஒரு நற்செய்தி! கம்பீரமான தூய ஒரு மகன் உமக்கு வழங்கப்படுகிறது. ஒரு தூய குழந்தை உமக்குக் கிடைப்பார். அந்த மகன் உமது வித்திலிருந்தே உமது சந்ததி, வழித்தோன்றலாக இருப்பார். அதாவது, அவர் உமது பௌதீக மகனாக இருப்பது மட்டுமின்றி உம்முடைய மகனாகவே இருப்பார். அழகிய, தூய மகன் உமது விருந்தினர் வருகிறார். அவரது பெயர் இம்மானுவேல் மற்றும் பஷீர் என்பதுமாகும். அவருக்கு பரிசுத்த ஆவி வழங்கப்பட்டிருக்கிறது. மேலும் அவர் அசுத்தத்திலிருந்து தூயவராக இருப்பார். அவர் அல்லாஹ்வின் ஒளியாவார். வானத்திலிருந்து வரும் அவர் அருளுக்குரியவராக இருக்கிறார். அவருடன் அருள் இருக்கிறது. அது அவர் வரும்போது உடன் வரும்.

அவர் கண்ணியத்திற்குரியவராகவும், மகத்துவம் கொண்டவராகவும், செல்வம் உடையவராகவும் இருப்பார். அவர் உலகில் வருவார். மேலும் தமது மஸீஹின் ஆவியினாலும் உண்மையின் ஆவியின் அருளினாலும் அதிகமானோரை நோயிலிருந்து தூய்மைப்படுத்துவார். அவர் அல்லாஹ்வின் வார்த்தை ஆவார். ஏனெனில் இறைவனுடைய கருணையும் தன்மானமும் அவரை கண்ணியத்திற்குரிய வார்த்தையுடன் அனுப்பியிருக்கிறது.

அவர் மிகவும் புத்திக் கூர்மை உள்ளவராகவும், நுண்ணிய அறிவுடையவராகவும் இருப்பார். மேலும் மேலும் உள்ளத்தால்சகிப்புத்தன்மை கொண்டவராகவும் இருப்பார். மேலும் வெளிப்புறமான, உட்புறமான ஞானங்களால் அவர் நிரப்பப்படுவார். மேலும் அவர் மூன்றை நான்காக்குபவராக இருப்பார். (இதன் பொருள் புரியவில்லை).

திங்கள்கிழமை, வாழ்த்துக்குரிய திங்கள் கிழமை. அவர் உயர்ந்த தகுதியிலுள்ள மிகவும் கண்ணியத்திற்குரிய புதல்வராவார். அவர் مَظْهَرُ الْاَوَّلِ وَالْاٰخِرِ۔ مَظْهَرُ الْحَقِّ وَالْعُلَاءِ كَاَنَّ اللّٰهَ نَزَلَ مِنَ السَّمَاءِ ஆரம்பம், முடிவின் தோற்றமாகவும், உண்மை, உயர்வின் தோற்றமாகவும் இருக்கிறார். அல்லாஹ் வானிலிருந்து இறங்கி வந்தது போன்றிருக்கும். அவருடைய வருகை மிகவும் அருளுக்குரியதாகவும், இறை கம்பீரத்தை வெளிப்படுத்துவதற்குக் காரணமாகவும் அமையும். இறைவன் தன் திருப்தி எனும் நறுமணத்தால் மணம் கமழ வைத்த ஒளி வருகிறார். நாம் அவரிடத்தில் நமது ஆவியை ஊதுவோம். இறைவனின் நிழல் அவர் தலை மீது இருக்கும். அவர் மிக விரைவில் முன்னேறுவார். கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாகத் திகழ்வார். மேலும் பூமியின் எல்லைகள் வரை புகழ் பெற்று விளங்குவார். சமுதாயங்கள் அவரிடமிருந்து அருள்களைப் பெற்றுக் கொள்ளும். பின்னர் அவர் வானத்தின் பக்கம் உயர்த்தப்படுவார். وَكَانَ اَمْرًا مَّقْضِيًّا – இது தீர்மானிக்கப்பட்டு விட்ட ஒன்றாகும். (ஆயினயே கமாலாத்தே இஸ்லாம். ரூஹானீ கஸாயின் தொகுதி 5 பக்கம் 647)

இந்த வார்த்தைகளே முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பு உள்ள வார்த்தைகளாகும். பிறகு ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மது ஆகிய ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் பற்றி இந்த முன்னறிவிப்பு தொடர்பாக கூறினார்கள். எனது முதல் மகன் வஃபாத் ஆனதும் அறிவற்ற மவ்லவிகளும் அவர்களின் நண்பர்களும் கிறித்தவர்களும் இந்துக்களும் அந்த குழந்தை இறந்ததற்காக தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். அவர்களுக்கு மீண்டும் மீண்டும் கூறப்பட்டிருந்தது. 1886 ஆம் ஆண்டு பிப்ரவரி 20 ஆம் தேதி முன்னறிவிப்பில் சில பிள்ளைகள் வஃபாத் ஆவது குறித்தும் கூறப்பட்டிருந்தது. எனவே, சிறு வயதில் சில குழந்தைகள் மரணித்து விடுவதும் அவசியமாக இருந்தது. இருந்தும் அவர்கள் ஆட்சேபனையிலிருந்து விலகவில்லை. அல்லாஹ் எனக்கு இன்னொரு பிள்ளையைப் பற்றி முன்னறிவித்திருந்தான். அந்த பச்சைப் பிரசுரத்தின் 7 –வது பக்கத்தில் அந்த இன்னொரு மகன் பிறப்பது பற்றி கூறப்பட்டுள்ளது. உமக்கு இன்னொரு பஷீர் தரப்படுவார். அவரது இன்னொரு பெயர் மஹ்மூது ஆகும்.

அன்னார் கூறுகிறார்கள்: அவர் 1 செப்டம்பர் 1888 வரை இந்த நாளில் அன்னார் இதனை அறிவிக்கிறார்கள். அவர் பிறக்கவில்லை. ஆனால் அல்லாஹ்வின் வாக்குறுதிக்கு ஏற்ப அந்த காலத்திற்குள் பிறப்பார். பூமியும் வானமும் தள்ளிப் போகலாம். ஆனால் அவனது வாக்குறுதி அழிந்து போகாது. இதுவே அந்த முன்னறிவிப்பாகும். இது அந்த பச்சை பிரசுரத்தின் 7 –வது பக்கத்தில் உள்ளது. இதற்கேற்ப ஜனவரி 1889 –ல் மகன் பிறந்தார். அவருக்கு மஹ்மூது என்று பெயர் வைக்கப்பட்டது. அவர் அல்லாஹ்வின் அருளால் உயிருடன் இருக்கிறார். இப்போது அவருக்கு 17 வயது ஆகிறது. இவ்வாறு முதலில் கூறியதற்குப் பிறகு இவ்வாறு ஹகீகத்துல் வஹியில் குறிப்பிடுகிறார்கள். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இன்னும் பல சான்றுகளும் உள்ளன. நிறைய சான்றுகளைத் தருவதற்கு பதில் நான் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய சான்றைக் கூறுகிறேன். அன்னார் முஸ்லிஹ் மவ்வூது பற்றி, அவர்களின் அந்தஸ்து பற்றி என்ன கருதியிருந்தார் என்பது குறித்து ஒரு அறிவிப்பை எடுத்து வைக்கிறேன்.

பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுடைய மரணத்திற்கு ஆறு மாதங்கள் முன்பு எஸ்ஸர்னர் குர்ஆன் பாடம் எழுதிய பீர் மன்சூர் முஹம்மது சாஹிப் அவர்கள் முதல் கலீஃபாவிடம், நான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பிரசுரத்தைப் படித்தபோது, அந்த வாக்களிக்கப்பட்ட மகன் மியான் சாஹிப்தான். அதாவது ஹஸ்ரத் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத்தான் என்பது தெரிய வந்தது என்று கூறினார்கள். உடனே முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள், எனக்கு முதலிலேயே தெரியும். நீங்கள் பார்க்கவில்லையா? நான் மியான் சாஹிபோடு எவ்வாறு குறிப்பான முறையில் பழகுகிறேன்; மதிப்பு தருகிறேன் என்று கூறினார்கள்.

பீர் சாஹிப் கூறினார்கள்: நான் அதே வார்த்தையை எழுதி உண்மைபடுத்துவதற்காக அவர்களிடம் காட்டினேன். ஹஸ்ரத் முதல் கலீஃபா அவர்கள் அதில் எழுதினார்கள். இந்த வார்த்தையை நான் பீர் மன்சூர் முஹம்மது சாஹிபிடம் கூறினேன். இவ்வாறு எழுதி அதில் நூருத்தீன் என்று கையொப்பமும் இட்டார்கள். 10 செம்படம்பர் 1913 என்று தேதியும் எழுதினார்கள். அன்னார் கூறினார்கள்: 11 செப்டம்பர் 1913 அன்று மாலை வேலைக்குப் பிறகு அந்த வாசகம் எழுதப்பட்ட நாளுக்கு அடுத்த நாள் முதல் கலீஃபா அவர்கள் கட்டிலில் படுத்திருந்தார்கள். நான் அவர்களின் கால்களைப் பிடித்து விட்டுக் கொண்டு இருந்தேன். எந்த பேச்சும் பேசாத நிலையில் உரையாடல் நடைபெறாத நிலையில் முதல் கலீஃபா அவர்கள், ஹஸ்ரத் மிர்ஸா மஹ்மூது அஹ்மத்தான் முஸ்லிஹ் மவ்வூது என்ற முன்னறிவிப்பை நிறைவேற்றுபவர் என்ற கருத்தை இப்போது வெளியிட வேண்டாம். எதிர்ப்பு வந்தால் வெளியிட வேண்டும் என்று தாமே கூறினார்கள். (பிஸ்ரே மவ்வூது பக்கம் 27. காலித் மாத இதழ் ஹஸ்ரத் முஸ்லிஸ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய சிறப்பிதழ் ஜூன், ஜூலை 2008 பதிப்பு பக்கம் 75-76)

இன்னொரு பெரியவர் குலாம் ஹுஸைன் சாஹிப் நம்பர்தார் முல்லாராசியாக்குர் என்ற சியால்கோட் மாவட்டத்தைச் சார்ந்த ஒரு ஊரைச் சார்ந்தவர். ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா தான் முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவித்தபோது எழுதினார். எது அன்புக்குரிய தலைவரும் வழிகாட்டியுமான ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபதுல் மஸீஹ்தான் முஸ்லிஹ் மவ்வூது ஆவார் என்ற செய்தியை 30 ஜனவரி அல் ஃபஸ்ல் பத்திரிகையில் படித்து அல்லாஹ்வுக்கு நன்றி தெரிவிக்கிறேன் – அல்ஹத்துலில்லாஹ். அல்லாஹ், நான் கண்ட கனவை உண்மையாக்கிக் காட்டி விட்டான்.

குமரி மாவட்டத்தில்
இஸ்லாமிய புத்தகங்கள் மற்றும்
பத்ர் வார இதழ் சம்பந்தமாக
**தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:**
1029, கேப் ரோடு (அரசுப் பள்ளி எதிரில்)
இடலாக்குடி, கோட்டார், நாகர்கோவில்.
Cell : 9791305610
Email : amjnagercoil@gmail.com

மேலும் எழுதுகிறார்: ஹுஸூருக்கு தெரிந்திருக்கலாம். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் அவர்கள் உயிருடன் இருக்கும் போது அல் ஃபஸ்ல் பத்திரிகை அலுவலகத்தில் ஷாதீ கான் சாஹிப் மர்ஹூம் சியால்கோட்டி ஹுஸூருக்கு வாழ்த்துச் சொல்லும்போது அல்லாஹ் எனக்கு கனவில் காட்டியுள்ளான். முதல் கலீஃபாவிற்குப் பிறகு ஹுஸூர் இரண்டாவது கலீஃபா ஆவீர்கள். வெற்றி பெறுவீர்கள். உங்கள் மீது வஹியும் இறங்கும் என்ற எனது இந்த கனவை நான் முதல் கலீஃபாவிடம் கூறினேன். ஹுஸூர் மிகவும் மகிழ்ச்சியுடன் அதனை உண்மைப்படுத்தி –னார்கள். இதனால்தான் அவருக்கு இப்போதே எதிர்ப்பு தொடங்கி விட்டது என்று கூறினார்கள்.

இவர் சய்யிது ஹாமிது சாஹிப் மர்ஹூம் அவர்களுக்கும் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய தமது கனவை கூறினார்கள். இப்போது நீங்களே முஸ்லிஹ் மவ்வூது என்று வாதம் செய்து வீட்டீர்கள் – அல்ஹம்துலில்லாஹ் என்றார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது 1944 –ல் நான் தான் முஸ்லிஹ் மவ்வூது என்று அறிவிப்பு செய்தார்கள். ஆனால் எனக்கு அன்னார்தான் கலீஃபதுல்லாஹ் மற்றும் முஸ்லிஹ் மவ்வூது என்று முதல் கலீஃபா இருக்கும்போதே உறுதியாகி விட்டது என்றும் கூறினார்கள். (அல் ∴பஸ்ல் காதியான் தொகுதி 32 எண் 49; 20 பிப்ரவரி 1944 பக்கம் 19)

இன்னொரு பெரியவர் சூஃபி முதீவுர் ரஹ்மான் சாஹிப் பங்காளி அவர்கள் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு எழுதிய தமது ஒரு கடிதத்தில் அன்னார் முஸ்லிஹ் மவ்வூதிற்கான அறிவிப்பு செய்த போது எழுதினார். எனது ஒரு கனவைக் கூறுவது சரியாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த கனவை நான் 30 அல்லது 24 வருடங்கள் முன்பு கண்டதாகும். நான் இதனை ஹுஸூரிடம் முன்னரும் ஒருமுறை எழுதியுள்ளேன். இப்போது ஹுஸூர் அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது என்ற வாதத்தை வைத்த பிறகு நான் கண்ட கனவு இந்த முன்னறிவிப்பு சம்பந்தமானது என்பது எனக்கு உறுதியாகி விட்டது. நான் கண்டது என்ன –வென்றால், ஒரு ஈது கூட்டம் நடக்கிறது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஓர் உயரமான இடத்தில் நிற்கிறார்கள். பச்சை நிற ஆடை அணிந்து குத்பா கொடுக்கிறார்கள். குத்பா முடிந்ததும் நான் கை குலுக்குவதற்காக அருகில் செல்கிறேன். பார்த்தால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இல்லை. ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத் –தஆலா பினஸ்ரிஹில் அஸீஹ் அவர்கள் நிற்கிறார்கள். அதாவது இரண்டாவது கலீஃபா நிற்கிறார்கள். இந்த கனவை நான் டாக்டர் பத்ருத்தீன் சாஹிபிடமும் சகோதரர் மவ்லவி ஸில்லுர் ரஹ்மான் சாஹிபிடமும் கூறினேன். மவ்லவி ஸில்லுர் ரஹ்மான் சாஹிப் கூறினார்கள்: உமக்கு ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் பற்றிய முன்னறிவிப்பு காட்டப்பட்டுள்ளது. அழகிலும் கருணையினும் உன்னைப் போன்றவராக இருப்பார் என்ற அம்சம் உமக்கு காட்டப்பட்டுள்ளது என்றார். இதுவும் முன்னறிவிப்பின் வார்த்தைகளாகும். (அல் ∴பஸ்ல் காதியானி தொகுதி 32 எண் 199; 25 ஆகஸ்டு 1944 பக்கம் 2)

அதுபோன்று சேக் முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் கூறினார்கள்: நாங்கள் பலமுறை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் இடமிருந்து கேட்டுள்ளோம். ஒரு முறை அல்ல. பல முறை கேட்டுள்ளோம். முன்னறிவிப்பில் கூறப்பட்டது மியான் மஹ்மூதுதான் என்று அன்னார் கூறியுள்ளார்கள். மியான் மஹ்மூது இடம் எந்த அளவுக்கு மார்க்க உத்வேகம் உள்ளது என்றும் அவருக்காக நான் பலமுறை குறிப்பாக துஆ செய்கிறேன் என்றும் அன்னார் கூறியுள்ளார்கள். (அல்ஹகம் 28 டிசம்பர் 1939. காலித் மாத இதழ் ஹஸ்ரத் முஸ்லிஸ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய சிறப்பிதழ் ஜுன், ஜுலை 2008 பதிப்பு பக்கம் 38) ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் கூறாத வரை அன்னார் வாதம் செய்யவில்லை. அன்னாருக்கு தெளிவாக அதனை கூறி விடுமாறு கட்டளை வந்த பிறகுதான் அன்னார் அது பற்றி அறிவித்தார்கள்.

பிறகு அன்னார் கூறிகிறார்கள்: ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களால் வாக்களிக்கப்பட்ட மகனைப் பற்றி முன்னறிவிக்கப்பட்டவற்றுள் பல அம்சங்கள் நிறைவேறியிருப்பதால் அந்த முன்னறிவிப்பு என்னைப் பற்றிதான் என்று பலரும் கூறியுள்ளார்கள். அவர்களிடம் நான் இவ்வாறே கூறி வந்தேன். அல்லாஹ் எனக்கு கட்டளை இடாமல் நான் அவ்வாறு ஒருபோதும் அறிவிக்க மாட்டேன். இறுதியில், அந்த நாளும் வந்தது. அல்லாஹ் எனது நாவால் அதனை அறிவிக்கச் செய்தான். (அல் ∴பஸ்ல் காதியான் தொகுதி 49/14 எண் 40; 19 பிப்ரவரி 1960 பக்கம் 67)

பிறகு அன்னார் ஹோஷியார்பூர் கூட்டத்தில் அறிவிப்பு செய்தபோது கூறினார்கள்: இறைவன் மீது ஆணையிட்டு நான் கூறிக் கொள்கிறேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் முன்னறிவிப்புக்கு ஏற்ப தமது வாக்களிக்கப்பட்ட மகனாகவும், அன்னாரது பெயரை பூமியின் எல்லை வரை எட்டச் செய்பவனுமாக கூறியது என்னைத் தான். லாஹூரில் நடைபெற்ற கூட்டத்தில் அன்னார் இவ்வாறு கூறினார்கள்: தனித்தவனும் பிடிப்பதில் கடிமையானவனும் ஆகிய இறைவன் மற்றும் எத்தகைய இறைவன் பெயரில் சத்தியம் செய்வது சபிக்கப்பட்டவனின் பணியோ அத்தகைய இறைவன் மீதும் எவன் மீது இட்டுக்கட்டுபவர் அவனது தண்டனையிருந்து தப்பிக்க முடியாதோ அந்த இறைவன் மீது ஆணையாக! இறைவன் இந்த லாஹூரின் நகரில் எண். 13 டெம்புள் ரோடில் ஷேக் பஷீர் அஹ்மது சாஹிப் அட்வேகேட் வீட்டில் வைத்து எனக்கு அறிவித்தான். நான்தான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பை நிறைவேற்றக்கூடிய மகன் ஆவேன். நானே முஸ்லிஹ் மவ்வூது ஆவேன். யார் மூலம் இஸ்லாம் பூமியின் எல்லை வரை பரவுமோ தவ்ஹீது உலகில் நிலைநாட்டப்படுமோ அது நானாவேன். (அல் ∴பஸ்ல் காதியான் தொகுதி 47/12 எண் 13; 15 ஜுலை 1958 பக்கம் 4) ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்பை நிறைவேற்றக் கூடியவருக்கு 52 அல்லது 58 அடையாளங்கள் அதாவது 50 –க்கும் மேற்பட்ட அடையாளங்களைக் கூறியுள்ளார்கள். அவர்களிடம் காணப்படும் அந்த அடையாளங்களை நம்மவரும் சரி அன்னியரும் சரி எவ்வாறு பார்த்தார்கள் என்பதைப் பற்றி கூறுகிறேன்.

முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் வஃபாத்தின்போது டமாஸ்கஸைச் சேர்ந்த சய்யிது அபுல் ஃபரஜ் அல்ஹஸ்னி என்பவர் கூறுகிறார். அமீருல் முஃமினின் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வஃபாத் ஆனதில் எமது உள்ளங்கள் வருத்தத்தால் நிறைந்தன. கவலை ஏற்பட்டுள்ளது. இந்த கவலை உலகம் முழுவதும் உள்ள எல்லா அஹ்மதிகளையும் பாத்தித்துள்ளது. குறிப்பாக அஹ்மதிய்யா ஜமாஅத் டமாஸ்கஸுக்கு கவலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில் இந்த ஜமாஅத் ஹுஸூர் அவர்களால் நடப்பட்ட செடியாகும். இது அன்னாரது அருளுக்குரிய கையே நட்டியுள்ளது. அன்னாரது குறிப்பான ஆதரவும் கவனமும் நீர் பாய்ச்சியது. அவ்வாறு இந்த மரம் வளர்ந்தது; மலர்ந்தது. அல்லாஹ், அவர்களைப் பற்றி உண்மையாகவே கூறினான். சமுதாயங்கள் அவர்களிடம் இருந்து பரகத்தைப் பெறும் என்று நாங்கள் அன்னாரின் துஆவின் பரக்கத் மற்றும் கவனத்தின் காரணத்தால் இறை அருளைப் பெற்றோம்.

அவர் கூறுகிறார்: எனக்கு நன்றாக நினைவில் உள்ளது. நான் எப்போது ஹுஸூரிடம் துஆவுக்காக எழுதினாலும் அது ஏற்கக்கப்படுவதின் அறிகுறியை ஆன்மீகமாகவும் பௌதீகமாகவும் உணர்ந்துள்ளேன். அல்லாஹ்வின் வஹி அன்னார் பற்றி முற்றிலும் உண்மையாகும். ஒளி வருகிறது ஒளி. அல்லாஹ் தனது திருப்தி என்னும் நறுமணத்தால் அவரை மனம் கமழ வைத்தான். (அல் ∴பஸ்ல் காதியான் தொகுதி 55/20 எண் 10; 12 ஜனவரி 1968 பக்கம் 5) 27 ஜுலை 1944 அல் ஃபஸ்லில் கண்ணியத்திற்கு உரிய முஹம்மது இஸ்மாயீல் சாஹிப் உடைய குறிப்பு வருகிறது முஹம்மது இஸ்மாயீல் அஹ்மத் சாஹிப் கமால்டெராவில் இருந்து இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் இடம் தமது அஹ்மதி அல்லாத உறவினரான முஹம்மது அக்ரம் சாஹிப் உடைய ஒரு கனவை எழுதுகிறார். அவர் அதுவரை அஹ்மதிய்யா இருக்கவில்லை.

அவர்கள் கூறுகிறார்கள்: ஹுஸூர் அவர்கள் 1936 நவாப் ஷா வருவதற்கு முன்னதாக ஒருநாள் இரவில் கனவில் கண்டேன். நவாப் ஷாவின் வட்ட

**Classic Mobile's & Watch, Hiba watch & Mobiles**
Poyampalayam, P.N. Road,
Tiruppur.
Ph: 95666 47717

0422-2399980, 4351980
emial: metrozonesince1980@gmail.com
web: www.metrozoneonline.com
**Metro Zone**
WATCH, MOBILES & ELECTRONICS
SALES & SERVICE

276, N.H. Road, Coimbatore - 641 001.

வடிவிலான ஒரு கடைவீதி. அங்கு ஸ்டேஷனுக்கு அருகில் இருந்து ஒருவர் சிங்கத்தின் மீது பயணம் செய்து வந்து கொண்டு இருக்கிறார். நான் அருகில் வந்ததும் பார்க்கிறேன். அவரது உடலில் திருக்குர்ஆனின் வசனங்கள் எழுதப்பட்டுள்ளன. நான் ஒருவரிடம் இவர் யார் என்று கேட்டேன். அவர், இவர் மிர்ஸா மஹ்மூது அஹ்மத் காதியானி என்றார். இவர் எப்படிபட்டவர் என்று கேட்கிறேன். அதற்கு அவர், இவர் உலகில் மிகப்பெரிய வலியுல்லாஹ் ஆவார் என்கிறார்கள். (அல் ஃபஸ்ல் காதியான் தொகுதி 32 எண் 174; 27 ஜுலை 1960 பக்கம் 4)

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய முன்னறிவிப்பின் உண்மைத்துவத்தின் வெளிப்பாட்டை இறைவன் அன்னியர்கள் மூலமாகவும் தோன்றச் செய்தான். இவ்வகையில் ஒரு கண்ணித்திற்குரிய அஹ்மதி அல்லாத ஓர் ஆலிம் மவ்லவி சமீவுல்லாஹ் சாஹிப் பாரூகி என்பவர் பாகிஸ்தான் உருவாவதற்க முன் உண்மையை வெளிப்படுத்துதல் என்ற பெயரில் ஒரு பிரசுரத்தில் எழுதினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு செய்தி கிடைக்கிறது. உன்னுடைய சந்ததியில் இருந்து உம்முடைய மகன் ஒருவரை உமது ஜமாஅத்திற் –காக நான் நிலை நாட்டுவேன். அவருக்கு எனது வஹியை தந்து கண்ணியப்படுத்துவேன். அவர் மூலமாக உண்மையை வெளியே கொண்டுவருவேன். நிறைய பேர் உண்மையை ஒப்புக் கொள்வர்.

அவர் கூறுகிறார்: இந்த முன்னறிவிப்பைப் பாருங்கள். மீண்டும் மீண்டும் படியுங்கள். பிறகு ஈமானுடன் கூறுங்கள். இந்த முன்னறிவிப்பு நிறைவேறவில்லையா? எப்போது இந்த முன்னறிவிப்பு செய்யப்பட்டதோ அப்போது இந்த இப்போதைய கலீஃபா ஒரு சிறு பையனாக இருந்தார். ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் இந்த சிறுவனை கலீஃபாக ஆக்குமாறு எந்த உயிலும் கூறவில்லை. கிலாஃபத்தின் தேர்வு மக்களின் கருத்துக்கு விடப்பட்டிருந்தது. இந்த வகையில் பெரும்பாலார் ஹக்கீம் நூருத்தீன் சாஹிபை கலீஃபாவாக ஏற்றுக் கொண்டனர். அப்போது அவரது எதிரிகள் வாக்களிக்கப்பட்ட மகன் பற்றிய முன்னறிவிப்பைக் கூறி ஏளனமும் செய்தனர். முதல் கலீஃபா தேர்ந்தெடுக்கப்பட்டபோது பலரும் ஏளனமாகப் பேசினர். மகன் வருவார் என்றார். பாருங்கள். மகன் இப்போது வரவில்லை என்றனர். ஆனால் ஹக்கீம் சாஹிப் வஃபாத் ஆனதும் மிர்ஸா பஷீருத்தீன் அவர்கள் அஹ்மதிய்யத்தின் கலீஃபாவானார்கள்.

இதனை அஹ்மதி அல்லாதவர் எழுதுகிறார். நான் அஹ்மதி இல்லை. இது உண்மையாகும் அன்னாரின் காலத்தின் அஹ்மதிய்யத் அடைந்த முன்னேற்றம் வியக்கத்தக்கதாக இருந்தது. மிர்ஸா சாஹிபின் காலத்தில் அஹ்மதிய்யத் மிகவும் குறைவாக இருந்தது. கலீஃபா நூருத்தீன் சாஹிபின் காலத்திலும் சிறப்பான எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆனால் தற்போதைய கலீஃபாவின் காலத்தில் மிர்ஸாயிய்யத் உலகின் அனைத்து பகுதிகளிலும் பரவி விட்டது. நிலைமையைப் பார்த்தால் அடுத்த மக்கள்தொகை கணக்கெடுப்பில் அவர்களின் எண்ணிக்கை 1931 –ல் இருந்ததை விட இரு மடங்காகி விடும். இவர்களை எதிர்க்கும் எதிரிகளின் முயற்சிகள் முன்னர் இருந்ததை விட அதிகமாக ஒருங்கிணைந்து செயல்பட்டும்கூட இதுவே நிலையாகும். மேலும் மிர்ஸா சாஹிபின் சந்ததியில் இருந்து அவரது முன்னறிவிப்புக்கு ஏற்ப ஜமாஅத்திற்காக ஒருவர் நிறுத்தப்பட்டார். அவரது காலத்தில் வியத்தகு முன்னேற்றத்தை அடைந்துள்ளது. அதிலிருந்து மிர்ஸா சாஹிவின் முன்னறிவிப்பு முழுக்க முழுக்க நிறைவேறி விட்டது என்பது தெளிவாக தெரிகிறது. (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 267-268. காதியானில் 2007 -ல் அச்சிடப்பட்டது)

பிறகு இந்தியாவின் ஒரு முஸ்லிம் அல்லாத சீக்கிய பத்திரிகையாளர் அர்ஜுன்சிங், ரங்கின் பத்திரிகையின் எடிட்டர் அமிர்தசரஸ் கூறுகிறார். மிர்ஸா சாஹிப் 1901 –ல் கூறினார். அப்போது தற்போதைய கலீஃபா சிறு பையனாக இருந்தார். அப்போது முன்னறிவிப்பு செய்தார். எனக்கு ஒரு மகன் பிறப்பான் என்றும் ஒரு நாள் அவன் எனது அன்புக்குரியவன் ஆவான் என்றும், அவனை விட்டு எல்லா இருளையும் அகற்றுவேன். ஓர் உலகையே திருப்பிக் காட்டுவேன் என்றும் முன்னறிவித்தார்.

எனது எதிரிகளை இழிவுபடுத்திய எனது இறைவன் தூயவன் என்றும் முன்னறிவித் –திருந்தார். இந்த முன்னறிவிப்பு உண்மையில் ஆச்சரியமானது. 1901 –ல் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது பெரிய ஆலிம் ஃபாஸில் அல்ல. அல்லது அவருக்கு பெரிய அளவில் அரசியல் திறமையும் இல்லை. அந்த நேரத்தில் உமது மகன் இவ்வாறு இருப்பார் என்று கூறுவது ஒருவரது ஆன்மீக ஆற்றலுக்கு ஒரு சான்று ஆகும். மிர்ஸா சாஹிப் ஒரு வாதத்தை வைத்து ஓர் அரியணைக்கு அடிக்கல் நாட்டியுள்ளார் என்று எவரும் கூறலாம். எனவே எனக்குப் பிறகும் எனது பிரதிநிதித்துவம் என்று மகனுக்கு கிடைக்க வேண்டும் என்று விரும்பி உள்ளார் என்றும் கூறலாம். ஆனால் அந்த எண்ணம் தவறாகும். ஏனெனில் மிர்ஸா சாஹிப் தனத பிரதிநிதித்துவம் பற்றிய நிபந்தனை வைக்கவே இல்லை. கண்டிப்பாக கலீஃபா எனது குடும்பத்தைச் சார்ந்தவர்தான் வர வேண்டும் என்று கூறவே இல்லை. அவருக்கு பிறகு கலீஃபாவாக வந்திருக்கும் நபருக்கும் மிர்ஸா சாஹிபின் குடும்பத்துடன் எந்தத் தொடர்பும் இருக்கவில்லை.

முதல் கலீஃபாவிற்குப் பிறகும் கூட வேறு ஒருவர் கலீஃபாவாக வருவதும் கூட மிகவும் சாத்தியமான ஒன்றாகவே இருந்தது. இந்த வகையில் மவ்லவி முஹம்மது அலி சாஹிப் அமீர் ஜமாஅத் லாஹூர் கலீஃபாவாக ஆக்கப்படலாம் என்று எதிர்ப்பார்க்கப்பட்டவராக இருந்தார். ஆனால் பெரும்பாலார் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அவர்களையே ஆதரித்தனர். அவர் கலீஃபாவானார்.

அவர் எழுதுகிறார்: பெரிய மிர்ஸா சாஹிபிடம் ஓர் ஆன்மீக ஆற்றலும் வேலை செய்யவில்லை எனில் அவர் எவ்வாறு அறிந்தார்? எனது மகன் இவ்வாறு ஆவார் என்று மிர்ஸா சாஹிப் அவ்வாறு அறிவித்த போது அவருக்கு 3 மகன்கள் இருந்தனர். அவர் 3 பேருக்கும் துஆ செய்து வந்தார். ஆனால் முன்னறிவிப்பு மட்டும் ஒருவரிடம் மட்டுமே நிறைவேறியது. அவர் உலகில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி விட்டார். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 285-288. காதியானில் 2007 -ல் அச்சிடப்பட்டது) அன்று ஜமாஅத்திடம் இருந்த வசதி வாய்ப்புகள் இன்று இருந்தது போன்று இல்லை. இப்போதும் நம்மிடம் நிறைய வசதிகள் இல்லை. இருந்தும் கூட இப்போதிருந்த அளவுக்கு அப்போது இருந்ததில்லை. ஆனால் அந்நிலையிலும் அல்லாஹ்வின் உதவி ஒத்தாசையால் உலகில் 50 க்கும் மேற்பட்ட நாடுகளில் ஜமாஅத்தின் செடி நாட்டப்பட்டது. எல்லா கண்டங்களிலும் ஜமாஅத் உருவாகி இருந்தது. இது முஸ்லிஹ் மவ்வூது பற்றிய முன்னறிவிப்புக்கு ஏற்ப இருந்தது.

பிறகு முஸ்லிஹ் மவ்வூது வருகையின் நோக்கம் இஸ்லாம் மார்க்கத்தின் சிறப்பும் அல்லாஹ்வின் வார்த்தையின் அந்தஸ்தும் மக்களிடம் வெளிப்பட வேண்டும். இந்தியா பாகிஸ்தான் துணைக் கண்டத்தின் பிரபல முஸ்லிம் தலைவர் மவ்லவி சஃபர் அலி கான் சாஹிப் ஸமீன்தார் பத்திரிகையின் ஒரு புகழ்பெற்ற கவிஞர் எழுதுகிறார். இவர் மிகவும் தெளிவான வார்த்தைகளில் ஒப்புக் கொண்டவாறு இதை எழுதுகிறார்: காதைத் திறந்து கேளுங்கள். நீங்களும் உங்கள் மக்களும் மிர்ஸா மஹ்மூதை கியாமத் வரை எதிர்க்க இயலாது. மிர்ஸா மஹ்மூது இடம் குர்ஆனை உள்ளது. குர்ஆனின் அறிவு உள்ளது. உங்களிடம் என்ன உள்ளது? நீங்களே கனவில் கூட குர்ஆனை படித்ததில்லை. மிர்ஸா மஹ்மூது இடம் எத்தகைய ஜமாஅத் இருக்கிறது என்றால் அந்த ஜமாஅத் தனது உயிர், பொருள், அனைத்தையும் அன்னாரின் ஒரு சைகையில் அன்னாரின் காலடியில் வைத்து விடும். மிர்ஸா மஹ்மூதிடம் முபல்லிக்மார்கள் உள்ளனர். அவர்கள் பல்வேறு அறிவுகளில் திறமை பெற்றவர்கள் இருக்கின்றனர். அவர்கள் உலகின் எல்லா இடத்திலும் தமது கொடியை நாட்டி உள்ளார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 288. காதியானில் 2007 -ல் அச்சிடப்பட்டது)

முஸ்லிஹ் மவ்வூது பற்றிய இறை வாக்குறுதி அவர் உலுல் அஸ்ம் உறுதி வாய்ந்த எண்ணம் கொண்டவராக இருப்பார். மேலும், அவர் வெளிப்படையான மற்றும் உட்புறமான அறிவால் நிரம்பியவராக இருப்பார். இந்த வகையில் இந்தியாவின் சூஃபி ஹஸன் நியாமி தெஹ்லவி அன்னாரின் எழுத்தாற்றல் பற்றி எழுதுகிறார்: பெரும்பாலும் நோயுற்றிருப்பார். ஆனால் அவர் நோய் அவரது செயல்பாட்டைக் கெடுக்க முடிந்ததில்லை. எதிர்ப்பின் புயலில் திருப்தியாக செய்யபட்டு தனது ஆண்மையை நிரூபித்துள்ளார். அரசியல் அறிவும் இருந்தது. மார்க்க அறிவும் நன்றாக இருந்தது. போர் திறமையும் இருந்தது. அதாவது அறிவு மற்றும் எழுத்தாற்றல் மிக்கவராக அன்னார் இருந்தார்கள். மூளையிலும் பேனாவிலும் போர் புரிவதில் அவர்கள் திறமையுள்ளவர்களாக இருந்தார்கள். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 288. காதியானில் 2007 -ல் அச்சிடப்பட்டது) வாக்களிக்கப்பட்ட மகன் குறித்து முக்கியமான இன்னொரு முன்னறிவிப்பு

என்னவென்றால், இவர் கைதிகளை விடுவிப்பதற்குக் காரணமாக இருப்பார். இதுவும் பல்வேறு கோணத்தில் நிறைவேறியது. மனித அறிவு வியந்து போகும் அளவில் நிறைவேறி இருந்தது. காஷ்மீர் விடுதலை இயக்கம் அதற்கு அத்தாட்சியாகும். இந்த திட்டத்தை வெற்றி பெறச் செய்த பெருமை All India Kashmir Committee –ற்கே சேரும். இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பெரும் பெரும் தலைவர்கள், ஸுல்பிகார் அலி கான், டாக்டர் சர் முஹம்மது இக்பால், காஜா ஹஸன் நியாமி தெஹ்லவி, சய்யிது ஹபீப், சியாசத் பத்திரிகையின் தலைமை ஆசிரியர் இவர்களின் ஆலோசனையின் படி **25** ஜுலை **1931** ஷிம்லாவில் நிறுவப்பட்டது. இக்கமிட்டியின் தலைமைப் பொறுப்பு இரண்டாவது கலீஃபாவிடம் ஒப்படைக்கப்பட்டது. அன்னாரின் வெற்றிகரமான தலைமையின் கீழ் மனித உரிமை மறுக்கப்பட்ட நீண்ட காலமாக அடிமையாக இருந்த காஷ்மீர் முஸ்லிம்கள் மிகவும் குறைந்த காலத்தில் சுதந்திர காற்றை சுவாசித்தனர். அரசியல் சமூக உரிமைகள் ஒப்புக் கொள்ளப்பட்டன. அப்பகுதியில் முதல் முறையாக சட்டசபை நிறுவப்பட்டது. அன்னாரது பேச்சு மற்றும் எழுத்து காரணமாக பொருத்தமான பிரதிநிதித்துவம் கிடைத்தது. முஸ்லிம் பிரஸ் அன்னாரது பணிகளை ஒப்புக் கொண்டவாறு அன்னாரை பாராட்டி இவ்வாறு எழுதியது: இக்காலத்தில் கஷ்மீரில் நிலைமை மிகவும் நெருக்கடியாக இருந்தது. கருத்து வேறுபாடுகள் இருந்தபோதிலும் மிர்ஸா சாஹிபை தலைவராக அனைவரும் ஏற்றுக் கொண்டனர். அன்னார் இப்பணியை வெற்றியைக் கருத்தில் கொண்டு மிகச் சிறந்த முறையில் செய்தார்கள். கருத்து வேறுபாடு காரணமாக மிர்ஸா சாஹிபை தேர்ந்தெடுக்காமல் இருந்தால் திட்டம் தோல்வி அடைந்திருக்கும். கருணை காட்டப்பட வேண்டிய இந்த உம்மத் நஷ்டத்தை சந்தித்திருக்கும். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 1 பக்கம் 289; 2007 -ல் காதியானில் அச்சிடப்பட்டது)

மவ்லானா முஹம்மது அலி ஜவ்ஹர் சாஹிப். இவர் பெரும் அரசியல்வாதியும் ஆலிமும் ஆவார். இவர் ஹம்தர்த் பத்திரிக்கையில் **26** செப்டம்பர் **1927 –**ல் இவ்வாறு எழுதியுள்ளார். ஜனாப் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூது அஹ்மத் மற்றும் அவரது ஒழுங்கமைக்கப்பட்ட ஜமாஅத் குறித்து குறிப்பிடா விட்டால் அது நன்றிகேடாகும். அவர் தனது முழு கவனத்தையும் எந்த கருத்து வேறுபாட்டையும் பொருட்படுத்தாமல் அனைத்து முஸ்லிம்களின் நலனுக்காகவும் அர்ப்பணித்து விட்டார். இவர்களோ ஒருபுறம் மிம்பரில் அமர்ந்து இஸ்லாத்திற்கு தொண்டாற்றுவதாக வாதம்தான் செய்கிறார்கள். ஆனால் இந்த ஜமாஅத்தினர் தான் பணி செய்கிறார்கள். (காலித் மாத இதழ் ஹஸ்ரத் முஸ்லிஸ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய சிறப்பிதழ் ஜுன், ஜுலை 2008 பதிப்பு பக்கம் 320-321)

பிறகு குர்ஆன் விரிவுரையாளரும் சிதகே ஜதீத் பத்திரிகையின் தலைமை ஆசிரியருமான அல்லாமா அப்துல் மாஜித் தர்யாபாதி முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் வஃபாத்தின்போது முஸ்லிஹ் மவ்வூதுடைய திருக்குர்ஆன் தொண்டினைப் பாராட்டி இவ்வாறு எழுதினார். திருக்குர்ஆன் மற்றும் அதன் அறிவை உலக அளவில் பரப்புதல் இஸ்லாத்தை பரப்புதல் ஆகியவற்றிற்காக அன்னார் திட உறுதியுடன் தனது நீண்ட வாழ்நாளின் காலத்தில் தொடர்ந்து பணி செய்தார்கள். இவருக்கு அல்லாஹ் அதற்கான நற்கூலியை வழங்குவானாக. இவருக்கு அல்லாஹ் திருக்குர்ஆனின் அறிவை வழங்கியிருந்தான். அவரது விளக்கவுரையும் மிகவும் உயர்ந்ததாக இருந்தது. தனிச்சிறப்பு மிக்கதாகவும் இருந்தது. (சித்கே ஜதீது (லக்னோ) 18 நவம்பர் 1905)

ஓர் அமெரிக்க பாதிரி காதியான் வந்தார். இதுவும் உட்புற வெளிப்புற அறிவால் நிரம்பப்பட்டிருந்தார்கள் என்பதற்கான ஒரு உதாரணமாகும். **1914 –**ல் இந்த சம்பவம் நடந்தது. அவர் சில அஹ்மதிகளுக்கு முன் சில கேள்விகளை வைத்தார். அவை மிகவும் முக்கியமானவையாகும். நான் அமெரிக்காவில் இருந்து இங்கு வந்து நிறைய ஆலிம்களிடம் இதனை கேட்டு விட்டேன். ஆனால் திருப்திகரமான பதில் கிடைக்கவில்லை. இப்போது இந்த கேள்வியை உங்கள் கலீஃபாவிடம் எடுத்து வைக்க வந்துள்ளேன். அவர் என்ன எதில் தருகிறார் என்று பார்ப்போம் என்றார்.

ஷிம்லாவைச் சார்ந்த மவ்லவி உமருத்தீன் சாஹிப் கூறுகிறார்: அவரது கேள்வி எவ்வளவு சிக்கலானதாகவும் வித்தியாசமானதாகவும் இருந்தது என்றால் அந்த கேள்வியைக் கேட்டு எனக்கு இந்த உறுதி ஏற்பட்டது. அதாவது, ஹஸ்ரத் சாஹிப் முற்றிலும் சிறிய வயது. முறைப்படி படிக்கவில்லை. பொது அறிவும் குறைவு. எனவே இந்த கேள்விக்கு பதில் தர முடியாது. இதனால் ஜமாஅத் பற்றி தவறான எண்ணம் ஏற்படும். இவர் எல்லா இடமும் சென்று கூறுவார். ஹஸ்ரத் சாஹிப் பதில் சொல்லவில்லை என்றால் இந்த அமெரிக்க பாதிரி திரும்பிச் சென்று முழு உலகிலும் இதனை பிரச்சாரம் செய்வார். அஹ்மதி கலீஃபாவுக்கு ஒன்றும் தெரியவில்லை. கிறித்தவத்திற்கு எதிராக இவரால் நிற்க ஒருபோதும் முடியாது. இவர் பெயரளவில்தான் கலீபா என்று கூறுவாரே என்பது மவ்லவி சாஹிபின் எண்ணமாக இருந்தது. இந்த நிலையில் நான் மிகவும் கஷ்டத்திற்கு உள்ளானேன். அமெரிக்க பாதிரியை ஹஸ்ரத் சாஹிபை சந்திக்காமல் அப்படியே திருப்பி அனுப்ப முயற்சி செய்தேன். ஆனால் எனது முயற்சி வெற்றி பெறவில்லை. நான் கண்டிப்பாக சந்தித்து விட்டே செல்வேன் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். எனவே நான் ஹஸ்ரத் சாஹிபிடம் சென்று அமெரிக்க பாதிரி வந்திருக்கிறார். தங்களிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகிறார். என்ன செய்வது என்று கேட்டேன். ஹஸ்ரத் சாஹிப், எந்த தயக்கமுமின்றி அழைத்து வாருங்கள் என்றார்கள். பிறகு நான் அவரை அழைத்து வந்தேன். இருவருக்கும் இடையில் நான்தான் மொழிபெயர்ப்பாளராக இருந்தேன். அமெரிக்கன் பாதிரி சம்பிரதாயமான பேச்சுக்குப் பிறகு தனது கேள்வியை ஹஸ்ரத் சாஹிபிடம் எடுத்து வைத்தார். அதனை மொழிபெயர்த்து நான் கூறினேன். முஸ்லிஹ் மவ்வூது மிகவும் நிதானமாக அந்த கேள்வியைக் கேட்டார்கள். பிறகு அதற்கு எத்தனை திருப்திகரமான பதில் கொடுத்தார்கள் என்றால் அதனைக் கேட்டு நான் வியந்தேன். எனக்கு இவ்வாறு அன்னார் ஞானமிக்க திடமான பதில் தருவார்கள் என்ற நம்பிக்கை வரவில்லை. நான் அந்த பதிலை அமெரிக்கன் பாதிரிக்கு கூறியதும் அவரும் ஆச்சரியப்பட்டார். இன்று வரை நான் இத்தகைய அறிவுப்பூர்வமான உரையாடலையும் சான்றுகளையும் எவரது வாயிலிருந்தும் கேட்டதில்லை. உங்கள் கலீஃபா பெரும் அறிஞர். உலக மதங்கள் குறித்து நல்ல அறிவு இருக்கிறது. இதனை கூறி விட்டு மிகவும் மரியாதையுடன் ஹஸ்ரத் சாஹிப் உடைய கையை முத்தமிட்டு விட்டு திரும்பிச் சென்று விட்டார். (காலித் மாத இதழ் ஹஸ்ரத் முஸ்லிஸ் மவ்வூது (ரலி) அவர்களைப் பற்றிய சிறப்பிதழ் ஜுன், ஜுலை 2008 பதிப்பு பக்கம் 319-320)

பிப்ரவரி **1945 –**ல் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது அவர்கள் லாஹூரிலுள்ள அஹ்மதி விடுதியில் இஸ்லாத்தின் பொருளாதார நிலைபாடு குறித்து உரை நிகழ்த்தினார்கள். அன்னாரிடம் உலகியல் அறிவும் நன்றாக இருந்தது. உரைக்குப் பிறகு அந்த கூட்டத்தின் தலைவர் லாலா ராம்சந்த் ஒரு சிறிய உரை நிகழ்த்தினார். அதில் கூறினார்: நான் என்னை மிகவும் பேறு பெற்றவனாகக் கருதுகிறேன். எனக்கு இத்தகைய மதிப்பு வாய்ந்த சொற்பொழிவைக் கேட்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. அஹ்மதிய்யா இயக்கம் முன்னேறுவதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சி. மிக மிக வளர்ச்சி பெருகுகிறது. சொற்பொழிவை நீங்கள் கேட்டீர்கள். இதில் ஹுஸூர் மிகவும் மதிப்புமிக்க புதிய புதிய விஷயங்களை குறிப்பிட்டார்கள். எனக்கு இந்த உரையினால் பெரும் பலன் கிடைத்துள்ளது. நீங்களும் இந்த மதிப்பு வாய்ந்த விபரங்களிலிருந்து பலன் பெற்றிருப்பீர்கள் என்று நம்புகிறேன். இந்த கூட்டத்திற்கு முஸ்லிம்கள் மட்டுமின்றி முஸ்லிம் அல்லாதவர்களும் வந்துள்ளனர் என்பதில் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதவர்களுக்கு இடையில் தொடர்பு மேம்படுவதிலும் எனக்கு மகிழ்ச்சி ஏற்படுகிறது. ஜமாஅத்தே அஹ்மதிய்யாவின் கண்ணியம் அதிக நண்பர்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்த ஜமாஅத் எடுத்து வைக்கும் இஸ்லாம் இந்த நாட்டிற்கு மிகவும் பயனுள்ளதாகும். முதலில் நான் கருதி இருந்தது மிகவும் தவறாக இருந்தது. அதாவது இஸ்லாம் தனது சட்டங்களில் முஸ்லிம்களை மட்டுமே கவனத்தில் கொள்கிறது. முஸ்லிம் அல்லாதவர்களை கவனத்தில் கொள்வதில்லை என்று நினைத்தேன். இன்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் இமாமின் உரையைக் கேட்ட பிறகு இஸ்லாம் எல்லா மக்களிடமும் சம உரிமையைத் தருகிறது என்று தெரிந்தேன். அதனைக் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். நான் முஸ்லிம் அல்லாத நண்பர்களிடம் கூறுவேன். இஸ்லாத்திற்கு கண்ணியம் அளிப்பதில் உங்களுக்கு என்ன கஷ்டம்? நீங்கள் ஹுஸூர் உடைய உரையை இரண்டரை மணி நேரம் அமைதியாக கேட்டீர்கள். ஒரு ஐரோப்பியன் இதனைப் பார்த்தால் ஆச்சரியப்படுவான். இந்தியா இவ்வளவு முன்னேறி விட்டதா? என்று

இதற்காக நான் உங்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். நீங்கள் அமைதியாக உரையைக் கேட்டீர்கள். நான் என் சார்பாகவும் உங்கள் அனைவரின் சார்பாகவும் ஜமாஅத்தின் இமாமுக்கு இலட்சோப இலட்சம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். அன்னார் மிகவும் மதிப்புமிக்க செய்திகளைக் கொண்ட உரையை நமக்கு வழங்கியுள்ளார்கள். அதன் மூலம் நாம் பயனடைந்துள்ளோம். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 10 பக்கம் 495-496; 2007 -ல் காதியானில் அச்சிடப்பட்டது)

ஜனார் அக்தர் அவ்ர்னேர்வி சாஹிப் எம்.ஏ (பாட்னா பல்கலைக்கழக உருது பிரிவின் தலைவர்), பேராசிரியர் அப்துல் மன்னார் பேதல் (ஃபார்ஸி துறையின் முன்னாள் தலைவர், பாட்னா பல்கலைக்கழகம்) இவர் தஃப்ஸீரே கபீர் சம்பந்தமாக தமது ஒரு சம்பவத்தைக் கூறுகிறார். நான் ஒன்றுக்கு இரண்டு முறை ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹின் தஃப்ஸீரே கபீரின் சில தொகுப்புகளை பாட்னா பல்கலைக்கழகத்தின் ஃபார்ஸி துறையின் தலைவரிடம் கொடுத்தேன். அவர் இதனை படித்து விட்டு எத்தனை தாக்கத்திற்குள்ளானார் என்றால் இவர் இதனை படித்து விட்டு பாட்னாவிடம் ஷம்சுல் ஹுதா மத்ராஸின் அரபி பிரிவிடம் சில தொகுப்புகளை வழங்கினார். ஒருநாள் அவர் எல்லா ஆலிம்களையும் அழைத்து தமது கருத்தைக் கேட்டார்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுக்கு திருக்குர்ஆனின் அறிவுகள் வழங்கப்படும் என்பதும் முன்னறிவிப்பாகும். அப்போது ஓர் ஆலிம் கூறினார்: ஃபார்ஸி தஃப்ஸீர்களில் இதுபோன்ற தஃப்ஸீர் இல்லை. பேராசிரியர் அப்துல் மன்னான் அவர்கள் அரபி தஃப்ஸீர்களைப் பற்றி என்ன அபிப்பிராயம் என்று கேட்டபோது அவர் அமைதியாக இருந்தார். சிறிது நேரம் கழித்து ஒருவர் கூறினார்: பாட்னாவில் எல்லா அரபி தஃப்ஸீர்களும் கிடைக்கவில்லை. எகிப்து மற்றும் சிரியாவில் உள்ள அரபி தஃப்ஸீர்களையும் பார்த்த பிறகே கருத்து தெரிவிக்க முடியும். பேராசிரியர் சாஹிப் பழைய அரபி தஃப்ஸீர்களை குறிப்பிட்டார். பிறகு கூறினார்கள்: எல்லாம் மிர்ஸா பஷீருத்தீன் மஹ்மூதின் தஃப்ஸீரில் காணப்படுகின்ற கருத்துக்கள் எந்த தஃப்ஸீரிலும் இல்லை. நீங்கள் சிரியா, எகிப்தில் இருந்து புதிய தஃப்ஸீர் வாங்குங்கள். சில மாதங்கள் பார்த்து விட்டு என்னிடம் கூறுங்கள் என்று . ஃபார்ஸி மற்றும் அரபி ஆலிம்கள் வாய் பேச முடியாமல் ஆகி விட்டனர். (தாரீகே அஹ்மதிய்யத் தொகுதி 9 பக்கம் 158-159; 2007 -ல் காதியானில் அச்சிடப்பட்டது)

குறைஷி அப்துர் ரஹ்மான் சாஹிப் சக்கர் ஹுஸூருடைய அறிவு ஞானத்தை குறித்துக் கூறினார்: ஹுஸூர் அவர்கள் வந்திருந்தபோது நாங்கள் ஜமாஅத் அல்லாத நண்பர்களை அழைத்து வந்தோம். எனது ஒரு நண்பர் தமது அறிவில் பெருமையுடன் வந்தார். ஹுஸூர் சபைக்கு அழைத்து வந்தேன். நண்பர்கள் சில கேள்விகளைக் கேட்டனர். ஹுஸூர் அவர்கள் பதில் கூறினார்கள். நண்பர் ஆரம்பத்திலிருந்து இறுதி வரை அமைதியாக இருந்தார். சபை கலைந்ததும் நீங்கள் கேள்வி ஒன்றுமே கேட்கவில்லையே? என்று நான் அவரிடம் கேட்டேன். அவர் உடனே, இந்த இடத்தில் பேசுவது எமது அறியாமையை ஒப்புக் கொள்வதாகும். அதாவது எமது திரையை அகற்றிக் காட்டுவது போன்றது என்று கூறினார். அவர் கடுமையான எதிரியாவார். அவர் ஹுஸூருடைய கருத்துக்களின் தாக்கத்துக்கு உள்ளாகி இருந்தார். அவர், நான் இங்கிருந்து எனது ஈமானை பாதுகாப்பாக எடுத்துச் செல்வதே போதுமானதாகும் என்றார். (சவானிஹ் ∴பஸ்லே உமர் தொகுதி 5 பக்கம் 568)

ஒரு வாரந்திர பத்திரிகை எடிட்டர் லாலா கரம் சந் என்பவர் சில பத்திரிக்கையாளர்களுடன் காதியான் சென்றார். அவர் ஹுஸூர் அவர்களால் மிகவும் கவரப்பட்டார். தமது பத்திரிகையில் எழுதவும் செய்தார். அவர் கூறினார்: நான் ஸஃபருல்லாஹ் கான் சாஹிபை பெரிய அறிவாளி என்று நினைத்தேன். அப்போது ஸஃபருல்லாஹ் கான் சாஹிப் அவர்கள் வைஸ்ராய் உடைய Executive Council –ன் உறுப்பினராக இருந்தார்கள். பஷீருத்தீன் மஹ்முது அஹ்மது சாஹிபுக்கு முன்னால் அவரது மதிப்பு குறைவாகும். இவர் ஒவ்வொரு விஷயத்திலும் மிகச் சிறந்த கருத்தைக் கொண்டிருக்கிறார் ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபா உடைய தகுதி மிகவும் உயர்ந்தது; மிகச் சிறந்த கருத்தை கொண்டுள்ளார். மிகச் சிறந்த ஆதாரங்களை தருகிறார். இவருக்கு அளவற்ற நிர்வாகத்திறன் உள்ளது. இத்தகைய மனிதன் எந்தவொரு பிரதேசத்தையும் மிக உயரத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். (சவானிஹ் ∴பஸ்லே உமர் தொகுதி 5 பக்கம் 538)

ஒரு அறிவுத்திறன் உள்ள பெரியவர் காதியான் மாநாட்டுக்கு வந்திருந்தார். அவர் முஸ்லிஹ் மவ்வூது மற்றும் அவர்களது பின்பற்றுபவர்கள் பற்றி கூறினார். அவரைப் பற்றிய எல்லா விஷயத்துடன் ஒன்றைக் கண்டேன். அது என்னவென்றால் முழு ஜமாஅத்தும் முழு கூட்டமும் தமது கலீஃபாவின் ஒரு சிறு விரலின் அசைவில் சென்று கொண்டிருந்தது. ஹஸ்ரத் இமாம் ஜமாஅத் அஹ்மதிய்யத் தொடர்பாக அன்னாருக்கு எழுத்தாற்றலும் இருந்தது. சொற்பொழிவிலும் மிகச் சிறந்தவராக இருந்தார். இயக்கத்துக்கு மிகச் சிறந்த கவர்னர் ஆவார் என்ற முடிவுக்கு வந்தேன் என்றார். (சவானிஹ் ∴பஸ்லே உமர் தொகுதி 5 பக்கம் 538)

அல்லாமா நியாஸ் பதேஹ்பூரி சாஹிப் தஃப்ஸீரே கபீர் மூன்றாம் பகுதி படித்த பிறகு கூறுகிறார்: தஃப்ஸீரே கபீர் மூன்றாம் தொகுதி என் முன் இருக்கிறது. அதனை நான் மிகவும் கூர்ந்து பார்க்கிறேன். குர்ஆனை படிப்பதில் முற்றிலும் புதிய ஒரு சிந்தனையை அன்னார் உருவாக்கி விட்டார். இந்த தஃப்ஸீர் அதன் தகுதியை பொருத்தவரை முதல் தஃப்ஸீர் ஆகும். அதில் சான்றுகளும் அறிவுகளும் இணைக்கப்பட்டுள்ளன. அன்னாரது அறிவாற்றல், பரந்த பார்வை, அசாதாரணமான தொலைநோக்கு, அழகிய சான்றுகளை விளக்கும் ஆற்றல் ஆகியவை அன்னாரின் ஒவ்வொரு சொல்லிலும் தென்படுகிறது. அதனை இதுவரை படிக்கவில்லையே என்று நான் ஆதங்கப்படுகிறேன். இதன் எல்லா தொகுப்பையும் படிக்க வேண்டுமே என்று நினைக்கிறேன். நான் நேற்று சூரா ஹஜ் உடைய தஃப்ஸீர் படித்தேன். ஹஸ்ரத் லூத் (அலை) உடைய அன்னாரின் கருத்தைப் படித்து வியப்பு அதிகமாகியது. இதனை கூறியே ஆக வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகி விட்டேன். அன்னார் ஹாவுலயி பனாதீ ஹுன்ன எனது பெண்கள் இருக்கிறார்களே என்ற சொல்லுக்கு விளக்கம் தரும்போது எல்லா விரிவுரையாளர்களின் விளக்கத்திலிருந்தும் விலகி ஒரு புதிய முறையைக் கையாண்டுள்ளார்கள். அதனை பாராட்டும் தகுதி எனக்கில்லை. அல்லாஹ் அவர்களை நீண்ட காலம் நிம்மதியாக வாழ வைப்பானாக. (த.∴ப்ஸீரே கபீர் தொகுதி 7 -ன் அறிமுகம்)

இவ்வாறு நம்மவரும் அன்னியரும் முஸ்லிஹ் மவ்வூது உடைய கருத்துக்களின் தாக்கத்தைப் பெற்றிருந்தனர். அவர்கள் அன்னாரது சிறப்புகளைத் தெரிந்திருந்தார்கள். அவர்களை அது ஆச்சரியத்திற்கு உள்ளாக்கியது. முன்னறிவிப்பில் இவை அனைத்தும் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தற்போது இந்த கூட்டங்களில் இது சம்பந்தமான முன்னறிவிப்புகளைக் கேட்டு நாம் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களுடைய தகுதிகள் உயர்த்தப்படுவதற்காக துஆ செய்ய வேண்டும். அத்தோடு நாம் நம்மையும் ஆய்வு செய்ய வேண்டும். அஹ்மதிகள் ஒவ்வொருவரும் ஓர் உறுதியுடன் அஹ்மதிய்யத்திற்காக தமது எல்லா தகுதிகளையும் பயன்படுத்துவது அவசியமாகும். இதனை நாம் செய்தால் அஹ்மதிய்யத்தின் முன்னேற்றம் நம் வாழ்விலேயே முன்னை விட அதிகமாக ஏற்படுவதை நாம் பார்ப்போம். அல்லாஹ் நமக்கு அதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக.

★ ★ ★ ★ ★

**பத்ர் பத்திரிகை வாசகர்களுக்கு ஒரு முக்கிய தகவல்**

*ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அனுமதியுடன் பத்ர் பத்திரிகையின் ஆண்டுச் சந்தா அதிகரிக்கப்பட்டுள்ளது. புதிய விகிதாச்சார அடிப்படையில் ஆண்டுச் சந்தா 500 ரூபாயாக நியமிக்கப்படுகின்றது. அது 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து நடைமுறைக்கு வந்து விடும். தாள், பிரிண்டிங் செலவுகள், தபால் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள் அதிகரித்திருப்பதன் காரணமாக இந்த அறிவிப்பு நடைமுறைக்கு வருகிறது. வாசகர்கள் இதற்கேற்ப தமது ஆண்டுச் சந்தாவை அதிகரித்து 500 ரூபாயாக வழங்க வேண்டும் என்று தகவல் தரப்படுகிறது. பத்ர் பத்திரிகையின் பிரதிநிதிகளும் இதனை கருத்தில் கொள்ளவும்.*

(மேனேஜர், பத்ர் வாரப் பத்திரிகை காதியான்)

## 123 -வது காதியான் ஆண்டு மாநாடு 2017 பற்றிய சுருக்கமான அறிக்கை (மாநாடு துவக்கப்பட்டதிலிருந்து இப்போது 126 -வது வருடமாகும்)

## அஹ்மதிய்யத்தின் தலைமையகமான காதியான் தாருல் அமானில் 123 -வது அருளுக்குரிய ஆண்டு மாநாடு வெற்றிகரமாக நடைபெற்றது

**முஸ்லிம் தொலைக்காட்சி அஹ்மதிய்யா மூலமாக ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹ் அய்யதஹு.்.ல்லாஹு.்.த்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள், மாநாட்டில் பங்கு பெறுபவர்களிடம் அகப்பார்வைக்கு எழுச்சியூட்டக்கூடிய நிறைவுரையை நிகழ்த்தினார்கள்.**

✦ *44* நாடுகளின் பிரதிநிதிகள் மாநாட்டில் பங்கேற்றனர் ✦ *20,048* பேர் மாநாட்டில் கலந்து கொண்டனர் ✦ ஹு.்.ஸூர் அவர்கள் மாநாட்டிற்காக நிகழ்த்திய நிறைவுரையின்போது இலண்டனில் **5,300** பேர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர் ✦ தஹஜ்ஜு.்.து தொழுகை ✦ திருக்குர்ஆன் தர்ஸ் மற்றும் இறைவனை நினைவு கூர்கின்ற சுற்றுச்சூழல் ✦ கண்ணியத்திற்குரிய ஆலிம்களின் பொருட்செறிவு நிறைந்துள்ள சொற்பொழிவுகள் ✦ மார்க்கத் தோற்றுனர்களின் மாநாடு ✦ கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் அறிமுக சொற்பொழிவுகள் ✦ நமது நாட்டில் மற்றும் வெளிநாடுகளில் பேசப்படுகின்ற பல்வேறு மொழிகளில் மொழியாக்கத்திற்கான ஏற்பாடு ✦ ஜமாஅத் சகோதர்களுக்கு அவர்களது அறிவை அதிகப்படுத்தும் வகையில் தர்பிய்யத் விஷயங்கள் அடங்கிய குறும்படம் காட்டப்பட்டது ✦ பல்வேறு அறிவு சார்ந்த தகவல்களை தரக்கூடிய வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது ✦ *32* திருமணங்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது ✦ அச்சகம் மற்றும் மின்னனு ஊடகத்தில் மாநாடு பற்றிய கவரேஜ் ✦ அமைதி நிறைந்த நல்ல சீதோஷண நிலையில் எல்லா நிகழ்ச்சிகளும் சிறப்பாக நிறைவை எட்டியது ✦ *20* முதல் *22* டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான اِسْمَعُوْا صَوْتَ السَّمَآءِ جَآءَ الْمَسِيْحُ جَآءَ الْمَسِيْحُ *MTA* இன்டர்நேஷனில் காதியானிலுள்ள ஸ்டுடியோவிலிருந்து நேரலை ஆக ஒளிபரப்பப்பட்டது ✦ *3* முதல் *5* ஜனவரி வரை *“The Messiah of the Age”* என்ற தலைப்பில் ஆப்பிரிக்க மக்களுக்காக நேரலை நிகழ்ச்சி *MTA* -வில் ஒளிபரப்பப்பட்டது

*(தொகுதி 3 இதழ் 11 -ன் தொடர்ச்சி....)*

### பெண்களுக்கான மாநாடு

ஆண்டு மாநாட்டின் நாட்களில் ஒவ்வொரு வருடமும் இரண்டாவது நாளில் பெண்களுக்கென்று தனியாக மாநாடு நடைபெற்று வருகின்றது. இந்த வருடம் இந்த அமர்வு 30 டிசம்பர் 2017 அன்று மதியத்திற்குப் பிறகு ஆரம்பமானது. இந்த அமர்வை மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதா மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் (ரப்வா) அவர்களின் மனைவியான மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதி அமதுல் குத்தூஸ் பேகம் சாஹிபா அவர்கள் தலைமை தாங்கினார்கள். காதியானைச் சார்ந்த மதிப்பிற்குரிய வஜிஹா பஷாரத் சாஹிபா அவர்கள் திருக்குர்ஆன் ஓதினார்கள். சூரா பனீ இஸ்ராயீலின் 9 -வது சூராவை ஓதினார்கள். மதிப்பிற்குரிய அம்னா அல் ஹாதி ஸிரீன் சாஹிபா அவர்கள் இந்த வசனங்களின் மொழியாக்கத்தை படித்துக் காட்டினார்கள். மதிப்பிற்குரிய குஸேல் ஸபிய்யுல் லீனா சாஹிபா (சத்ர் லஜ்னா இமாயில்லாஹ் கஸகிஸ்தான்) அவர்கள் கஸீதா பாடினார்கள். இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் தஹ்ரீகே ஜதீத் செயலரான மதிப்பிற்குரிய அமதுல் பாஸித் புஷ்ரா சாஹிபா அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உருது கவிதையைப் பாடினார்கள். இந்த அமர்வின் முதல் சொற்பொழிவை “தீய சடங்களுக்கு எதிரான ஜிஹாதும், அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகளும்” என்ற தலைப்பில் மதிப்பிற்குரிய அமதுல் வாஸிஹ் ஷமாயிலா சாஹிபா (இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் துணைத் தலைவி) அவர்கள் நிகழ்த்தினார்கள். இரண்டாவது சொற்பொழிவை மதிப்பிற்குரிய ஷமீம் அஹ்தர் கியானி சாஹிபா (இந்திய லஜ்னா இமாயில்லாஹ்வின் முன்னாள் தலைவி) அவர்கள் நிகழ்த்தினார்கள். அவர்களின் சொற்பொழிவின் தலைப்பு “குறிப்பாக தொழுகைகளைப் பேண வைப்பதில் சந்ததிகளுக்கு கொடுக்கப்படும் தர்பியத்தில் அஹ்மதி தாய்மார்களின் பொறுப்புகள்” என்பதாகும். இந்த சொற்பொழிவுக்குப் பிறகு லஜ்னா இமாயில்லாஹ் சென்னையைச் சார்ந்த சகோதரிகள் தமிழ் மொழியில் கூட்டுப் பாடலை பாடினார்கள். மதிப்பிற்குரிய ஆ.்.பியா.்.பஸ்ல் சாஹிபா அவர்கள் அந்தப் பாடலின் உர்து மொழியாக்கத்தை படித்தார்கள். மாநாட்டின் இறுதியில் மதிப்பிற்குரிய சாஹிப் ஸாதி அமதுல் குத்தூஸ் பேகம் சாஹிபா அவர்கள் சில முக்கிய அறிவுரைகளைக் கூறினார்கள். அவர்கள் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூல்களை படிப்பதன் பக்கம் கவனமூட்டினார்கள். மேலும் இறைவனின் அன்பைப் பெறுவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பின்பற்றுவது மேலும் பெருமானார் (ஸல்) அவர்களைப் பின்பற்றி நடப்பதற்கான நல்வாய்ப்பு கிடைப்பதற்கு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு அன்னாரது கட்டளைகளுக்கு கீழ்படிந்து நடப்பது அவசியமானதாகும் என்பதை பற்றி எடுத்துக் கூறினார்கள். இந்த சந்தர்ப்பத்தில் பெண்களின் மாநாட்டு திடலில் வந்திருந்தவர்களின் எண்ணிக்கை 7333 ஆகும். துஆவிற்குப் பிறகு மாநாடு இனிதே நிறைவுற்றது. அல்ஹம்து லில்லாஹ்.

### துறைகளும் தங்குமிடங்களும்

இவ்வருடம் மாநாட்டிற்கான ஏற்பாடுகள் மற்றும் விருந்தினர்களைத் தங்க வைப்பது, உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வது மற்றும் ஏனைய தேவைகளைக் கருத்தில் கொண்டவாறு 33 துறைகளும் 30 தங்குமிடங்களும் உருவாக்கப்பட்டன. 4 லங்கர் கானா செயல்பட்டு வந்தது. காதியானின் எல்லா பகுதிகளிலும் வீடுகளில் தங்குகின்ற விருந்தினர்களுக்காக ஆறு இடங்களில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் உணவு பரிமாறுவதற்கான ஏற்பாடு செய்யபட்டிருந்தது.

### படைப்பின சேவைத் துறை

காதியான் ஆண்டு மாநாட்டின் துறைகளில் ஒரு முக்கிய துறையாக படைப்பின சேவைத் துறை இருந்து வருகின்றது. அதன் கீழ் அடிப்படையான விஷயங்களை மாநாட்டின் அமைதி மற்றும் ஒழுங்குமுறையைப் பேண வைப்பதுடன் பாதுகாப்பிற்கான டியூட்டியும் அதன் மூலமாகவே கண்காணிக்கப்படுகிறது. இந்த வருடம் இந்த துறையின் கீழ் டியூட்டி கொடுப்பதற்காக இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிலிருந்து 683 தன்னார்வத் தொண்டர்களான காதிம்களும் அன்ஸார்களின் இரண்டாவது அணியிலுள்ள 55 அன்ஸார்களும் வருகை தந்திருந்தனர்.

இந்த துறையின் கீழ் பணியாற்றுவதற்காக ஆண்டு மாநாட்டிற்கு வருகை தந்திருந்த ஒவ்வொரு விருந்தினருக்கும் அவர்களது புகைப்படத்துடன் கூடிய மாநாட்டு Registration Card குறிப்பிட்ட Bar Code உடன் வழங்கப்பட்டது. தொழுகை நேரங்களில் தாருல் மஸீஹின் வழிப்பாதைகளில் மற்றும் முஹல்லாக்களின் தெருக்களில் ஒழுங்குமுறையையும் கட்டுக்கோப்பையும் நிலைநிறுத்துவதற்காக காதிம்கள் டியூட்டி கொடுத்தனர். தாருல் மஸீஹ், பெஹஸ்தி மக்பரா, ஆண்டு மாநாட்டுத் திடல், காதியானில் உள்ள அனைத்து தலைமையகப் பள்ளிவாயில்கள் மற்றும் அனைத்து தங்குமிடங்களிலும் காதிம்களுக்கு நிரந்தரமான டியூட்டிகள் கொடுக்கப்பட்டு அவர்கள் அங்கு தமது கடமைகளை சிறப்பாக நிறைவேற்றினர். இவ்வாறே அல்குர்ஆன் கண்காட்சி, மக்ஸனே தஸாவீர், ஹோமியோபதி First கண்காட்சி ஆகியவை நடைபெற்ற இடங்களிலும் அதிகமாக விருந்தினர்கள் வந்து போயிருந்ததால் அங்கும் காதிம்கள் நிரந்தரமாக டியூட்டி கொடுத்து வந்தனர். இவ்வாறே இந்த வருடம் லூதியானவிலுள்ள தாருல் பைஅத், ஹோஸ்யார்பூரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தனிமையில் துஆ செய்து வந்த வீடு போன்ற புனித இடங்களிலும் கூட காதிம்கள் டியூட்டியில் அமர்த்தப்பட்டிருந்தனர். இந்த துறையின் கீழ் பாகிஸ்தான் பார்டர், இரயில் நிலையம், விமான நிலையம் போன்ற இடங்களிலும் கூட கண்ணியத்திற்குரிய விருந்தினர்களின் வசதியைக் கருத்தில் கொண்டவாறு காதிம்கள் டியூட்டியில் அமர்த்தப்பட்டிருந்தனர். Lost and Found மற்றும் அறிவிப்புகள் செய்வதற்கான ஓர் அலுவலகமும் நிறுவப்பட்டிருந்தது. இதன் செயல்பாட்டின் கீழ் விருந்தினர்களின் தொலைந்து போன பொருள்கள் தேடிக் கண்டுபிடிக்கப்பட்டு அவர்களுக்கு திரும்பக் கொடுக்கப்பட்டது. First Aid மற்றும் Emergency -ற்கான அலுவலகம் நிறுவப்பட்டது. இந்த அலுவலகங்களின் கீழ் 24 மணி நேரமும் விருந்தினர்களுக்கு வசதி செய்து தருவதற்காகவும் அவர்களின் சுகத்தை கருத்தில் கொண்டவாறும் காதிம்கள் மிகவும் உழைத்தவாறு டியுட்டி கொடுத்து வந்தனர். அல்லாஹ் தன்னார்வத்துடன் தொண்டு புரிந்து வந்த அனைத்து காதிம்களுக்கும் அன்ஸாருக்கும் நற்கூலியை வழங்குவானாக. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் துஆக்களுக்கு அவர்களை வாரிசாக்குவானாக. மேலும், தனது அருளால் அவர்கள் அனைவரது தொண்டுகளையும் ஏற்றுக் கொள்வானாக.

### தர்பிய்யத் துறை

காதியான் ஆண்டு மாநாட்டின் நாட்களில் 25 டிசம்பர் 2017 முதல் 7 ஜனவரி 2018 வரை மஸ்ஜிது அக்ஸா, மஸ்ஜிது முபாரக், முஹல்லா தாருல் அன்வாரிலுள்ள மஸ்ஜிது அன்வார் ஆகிய பள்ளிவாயில்களில் ஜமாஅத்தான தஹஜ்ஜு.்.த் தொழுகை நிறைவேற்றப்பட்டு வந்தது. இவ்வாறே காதியானிலுள்ள முஹல்லாக்களில் உள்ள ஏனைய 7 பள்ளிவாயில்களிலும் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் ஜமாஅத்தான தஹஜ்ஜு.்.த் தொழுகைக்கான ஏற்பாடு இருந்தது. மேலும், எல்லா பள்ளிவாயில்களிலும் .்.பஜ்ர் தொழுகைக்குப் பிறகு சிறப்பு தர்ஸிற்கான ஏற்பாடும் செய்யப்பட்டிருந்தது. தஹஜ்ஜு.்.த் தொழுகைக்காக ஜமாஅத் சகோதரர்கள் ஒலிபெருக்கியின் மூலமாக ஸலவாத் ஓதியவாறு

எழுப்புவதற்கான ஏற்பாடும் இருந்தது. இந்த துறையின் ஏற்பாட்டின் கீழ் காதியானிலுள்ள பல்வேறு தெருக்களிலும் சாலைகளிலும் ஜமாஅத்தின் போதனைகள் மற்றும் தர்பிய்யத் தொடர்பான வாசகங்கள் எழுதப்பட்டிருந்த அழகிய பேனர்கள் கட்டப்பட்டிருந்தன. அது தவிர உருது மற்றும் ஆங்கில மொழியில் ஆண்டு மாநாட்டின் நிகழ்ச்சிகள் அடங்கியுள்ள Booklet -ம் வெளியிடப்பட்டிருந்தது. அவற்றில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மற்றும் ஹஸ்ரத் ஐந்தாவது கலீ∴பத்துல் மஸீஹ் அவர்கள் ஆண்டு மாநாடு தொடர்பாக கூறி இருந்த பொன்னான போதனைகளும் குறிப்பிடப்பட்டிருந்தது.

## பைத்துத் துஆவில் நஃபிலான தொழுகைகளை நிறைவேற்றுதல் மற்றும் காதியானிலுள்ள புனித இடங்களுக்கு செல்லுதல்

ஒவ்வொரு வருடத்தைப் போன்றும் இந்த வருடமும் இந்தியாவிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் வந்திருந்த கண்ணியத்திற்குரிய விருந்தினர்களுக்காக முறையான கட்டுக்கோப்பான வழிமுறைகளைப் பேணியவாறு அவர்கள் பைத்துத் துஆவில் ந∴பிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்தினர்கள் மிகவும் இன்பத்துடனும் ஆர்வத்துடனும் பைத்துத் துஆவில் ந∴பிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்காக வெகுநேரம் வரை நீண்ட வரிசைகளில் தமது முறை வரும் வரை காத்திருந்தனர். இந்த நேரத்தில் இறைவனை திக்ர் செய்வதில் அவர்கள் ஈடுபட்டிருந்தனர். விருந்தினர்கள் ஒருமுறை மட்டுமே பைதுத்துஆ செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. அதனை அவர்கள் மிகப்பெரும் நற்பேறாகக் கருதினர்.

இவ்வாறே ஏனைய புனித இடங்களான மஸ்ஜிது முபாரக், மஸ்ஜிது அக்ஸா, மினாரத்துல் மஸீஹ், அத்தார் (தாருல் மஸீஹ்) மற்றும் பெஹஸ்தி மக்பராவில் விருந்தினர்கள் அதிகமாக வருகை தந்து அவற்றைக் கண்டு பயன் பெற்றனர். குறிப்பாக அத்தாரில் இருக்கின்ற ஸய்யிதுனா ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், ஹஸ்ரத் அம்மா ஜான் (ரலி) அவர்கள், ஸய்யிதுனா ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) ஆகியோர் பயன்படுத்தியிருந்த அருளுக்குரிய பொருள்களை விருந்தினர்கள் மிகுந்த பற்றுடன் பார்வையிட்டனர். பைத்துத் துஆவில் ந∴பிலான தொழுகைகளை நிறைவேற்றுவதற்கும் அத்தாரில் இருக்கின்ற அருளுக்குரிய பொருள்களைப் பார்ப்பதற்காகவும் ஆண்களுக்கும் பெண்களுக்கு-மென்று தனித்தனி நேரங்கள் நிர்ணயிக்கப்-பட்டிருந்தன.

## மொழிபெயர்ப்பு துறை

இந்த வருடம் காதியான் ஆண்டு மாநாடு 2017 -ன் போது கீழ்க்கானும் 9 மொழிகளில் ஆண்டு மாநாட்டின் சொற்பொழிவுகளும் மற்றும் எல்லா நிகழ்ச்சியையும் உடனுக்குடன் மொழியாக்கம் செய்வதற்கான ஏற்பாடு இருந்தது.

அரபி, ரஷ்யன், இந்தோனேஷியன், ஆங்கிலம், மலையாளம், தமிழ், தெலுங்கு, வங்காளம், கன்னடம் போன்றவை. அல்லாஹ்வின் அருளாலும் கருணையாலும் எல்லா மொழிகளின் மொழிபெயர்ப்பாளர்களும் சிறந்த முறையில் மொழிபெயர்க்கும் கடமையை நிறைவேற்றினர். ஆண்டு மாநாட்டின் அனைத்து நிகழ்ச்சிகளும் குறிப்பாக ஹுஸூர் அவர்களின் நிறைவுரையும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 9 மொழிகளில் மொழி-பெயர்க்கப்பட்டன. அதிகமான எண்ணிக்கையில் ஆண்களும் பெண்களும் மொழிபெயர்ப்பை கேட்டு பயனடைந்தனர். பெண்களின் சிறப்பு அமர்வின் நிகழ்ச்சிகளும் கூட அரபி, மலையாளம், ஆங்கிலம், இந்தோனேஷியன், மற்றும் வங்காளம் ஆகிய 5 மொழிகளில் உடனுக்குடன் மொழியாக்கம் செய்யப்பட்டது.

## அச்சகங்கள் மற்றும் ஊடகங்கள்

ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் அச்சக மற்றும் மின்னனு ஊடகங்கள் மாநாட்டை முழுமையாக கவரேஜ் செய்திருந்தது. பட்டாலா, அமிர்தசரஸ், குர்தாஸ்பூர், ஜலந்தர், சண்டிகர் மற்றும் இந்தியாவின் பல மாநிலங்களிலிருந்து மின்னனு மற்றும் அச்சக ஊடகங்களின் பிரதிநிதிகள் ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களிலும் கவரேஜிற்காக வருகை தந்திருந்தனர். ஆண்டு மாநாட்டின் அடுத்த நாள் மார்க்க தோற்றுநர்-களின் மாநாடு நடைபெற்றபோது அதனையும் ஹுஸூர் (அய்) அவர்களின் நிறைவுரையையும் குறிப்பாக அவர்கள் கவரேஜ் செய்திருந்தனர்.

## நிக்காஹ்களுக்கான அறிவிப்பு

பல பெற்றோர்களுக்கும் அவர்கள் ஆண்டு மாநாட்டில் கலந்து கொள்ளும் சந்தர்ப்பத்தில் அவர்களது பிள்ளைகளின் நிக்காஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் அருளுக்குரிய ஊரான காதியானில் நடக்க வேண்டும் என்ற விருப்பம் இருக்கின்றது. அல்லாஹ்வின் அருளால் இந்த வருடம் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் 30 டிசம்பர் 2017 அன்று தாருல் அன்வார் பள்ளிவாயிலில் மதிப்பிற்குரிய மவ்லானா முஸ∴ப்பர் அஹ்மது நாஸிர் சாஹிப் (தலைமையக நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத்) அவர்கள் 19 நிக்காஹ்களுக்கான அறிவிப்பை செய்தார்கள். இந்த சந்தர்ப்பத்தில் அவர்கள் ஹுஸூர் அவர்கள் திருமணம் தொடர்பாக கூறியிருந்த பொன்னான போதனைகளை படித்துக் காட்டினார்கள். இதற்கு பிறகு மற்ற நாட்களில் மேலும் மூன்று நிக்காஹ்களுக்கான அறிவிப்பு செய்யப்பட்டது. மதிப்பிற்குரிய இனாயதுல்லாஹ் சாஹிப் (த∴லீமுல் குர்ஆன் மற்றும் வக்∴பே ஆர்ஸிக்கான கூடுதல் நாஸிர் இஸ்லாஹோ இர்ஷாத்) மற்றும் மவ்லவி முஹம்மது கரீமுத்தீன் ஷாஹிது சாஹிப் (சத்ர் கஸா போர்டு, காதியான்) ஆகியோர் இந்த நிக்காஹ்களுக்கான அறிவிப்பை செய்தனர்.

## ஹோமியாபதி First கண்காட்சி

காதியான் ஆண்டு மாநாடு 2017 -ன் சந்தர்ப்பத்தில் ஸய்யிதூனா ஹுஸூர் (அய்) அவர்களின் அனுமதியுடன் Homeopathy First இந்தியா தரப்பிலிருந்து அஹ்மதிய்யா தலைமையக நூலகத்திலுள்ள ஹாலில் கண்காட்சி நடத்தப்பட்டது. இந்த கண்காட்சியில் கடந்த இரு வருடங்களில் Hemeopathy First தரப்பிலிருந்து இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் செய்யப்பட்ட பொதுத் தொண்டுகள் படங்கள் மூலமாக காட்டப்பட்டது. இவ்வாறே Hemeopathy First இந்தியாவின் தரப்பிலிருந்து மனித இனத்திற்கு அது செய்து வரும் தொண்டுகளை எடுத்துக் காட்டுகின்ற ஒரு சிறப்பு குறும்படமும் காட்டப்பட்டது. இவ்வாறே Hemeopathy First இந்தியா தரப்பிலிருந்து தயார் செய்யப்பட்ட சில பொருள்கள் உதாரணமாக Key Chain மற்றும் Coffee Mug போன்ற பொருள்களும் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்தன. காதியான் ஆண்டு மாநாட்டின்போது இந்த கண்காட்சி 24 டிசம்பர் 2017 முதல் 5 ஜனவரி 2018 வரை நீடித்திருந்தது. ஏறக்குறைய 7600 பேர் இந்த கண்காட்சியை பார்த்தனர். கண்காட்சியில் Visitor Book -ம் வைக்கப்பட்டிருந்தது. அதில் பார்வை-யாளர்கள் தமது கருத்துக்களையும் எழுதி இருந்தனர். அல்லாஹ்வின் அருளால் Hemeopathy First இந்தியாவின் இந்த கண்காட்சியும் கூட மிகவும் விரும்பப்பட்டிருக்கின்றது. Hemeopathy First இந்தியாவின் தொலைத்தூரப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள், இரத்த தான முகாம்கள், ஏழைகளுக்கு உதவி செய்வது, மாணவர்களுக்கு உதவி செய்வது, தூய குடி தண்ணீருக்கான ஏற்பாட்டை செய்வது ஆகியவற்றை தவிர இயற்கைச் சீற்றங்களின்போது பாதிக்கப்பட்ட மகக்ளுக்கு உடனடியாக நிவாரணத்திற்கு தேவையானவற்றை எட்ட வைப்பதிலும் இந்த அமைப்பு துரிதமாக செயல்படுகின்ற நல்வாய்ப்பைப் பெற்று வருகின்றது. காதியான் ஆண்டு மாநாட்டின் (2017) போது மாநாட்டுத் திடலின் வளாகத்திலும் கூட Hemeopathy First இந்தியாவின் ஓர் அறிமுக ஸ்டால் அமைக்கப்-பட்டிருந்தது. இதனை 4000 பேர் பார்வையிட்டனர்.

## தாருஸ் ஸலாம் பங்களாவில் அந்நூர் கண்காட்சி

2015 ஆம் ஆண்டு நடந்த ஆண்டு மாநாட்டின் போது தாருஸ் ஸலாம் பகுதியிலுள்ள ஹஸ்ரத் முதலாவது கலீ∴பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் தமது வாழ்நாளின் இறுதி நாட்களைக் கழித்த ஹஸ்ரத் நவாப் முஹம்மது அலி கான் சாஹிப் அவர்களின் பங்களா புதுப்பிக்கப்பட்டு அங்கு “அந்நூர் கண்காட்சி” என்ற பெயரில் ஒரு கண்காட்சி திறக்கப்பட்டது. இந்த வருடமும் ஆண்டு மநாட்டின்போது அதிகமான பார்வை-யாளர்கள் இந்த கண்காட்சியைப் பார்ப்பதற்காக வந்திருந்தனர். தினந்தோறும் ∴பஜ்ர் தொழுகைக்குப் பிறகிலிருந்து இரவு 10.00 மணி வரை கண்காட்சி திறந்து வைக்கப்பட்டிருந்தது. ஆண்டு மாநாட்டின் மூன்று நாட்களும் ∴பஜ்ர் தொழுகையிலிருந்து காலை 9 மணி வரையிலும் மக்ரிப் மற்றும் இஷா தொழுகைகளுக்குப் பிறகு இரவு பத்து மணி வரையிலும் கண்காட்சி திறந்து வைக்கப்பட்டிருந்தது. இந்த கண்காட்சியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் வரலாற்றின் பல்வேறு காலக்கட்டங்கள், புகைப்படங்கள் மூலமாகவும் போஸ்டர்கள் மூலமாகவும் காட்டப்பட்டன. இதை தவிர நஸாரத் நஷ்ரோ இஷாஅத்தின் ஏற்பாட்டின் கீழ் நஸ்ரோ இஷாஅத்தின் கட்டடத்தின் வளாகத்தில் குர்ஆன் கண்காட்சி மற்றும் மஹ்ஸனே தஸாவீர் (புகைப்படங்களின் கருவூலம்) என்ற துறையும் நிறுவப்பட்டிருந்தன. ஆண்டு மாநாட்டின் நாட்களில் அதிகமாக ஜமாஅத் சகோதரர்கள் இந்த கண்காட்சியையும் பார்த்தனர்.

## M.T.A – விலிருந்து اسمعوا صوت السماء என்ற அரபி நேரலை நிகழ்ச்சி

ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் 2017 ஆம் ஆண்டு 20 முதல் 22 டிசம்பர் வரை அரபி நிகழ்ச்சியான “اسمعوا صوت السماء جاء المسيح جاء الامسيح” (மஸீஹ் வந்து விட்டார். மஸீஹ் வந்து விட்டார். வானத்தின் ஓசையைக் கேளுங்கள்) என்ற அரபி நிகழ்ச்சி M.T.A இன்டர்நேஷனல் காதியான் ஸ்டுடியோவிலிருந்து நேரலையில் ஒளிபரப்பானது. இதில் கீழ்க்காணும் ஆலிம்கள் கலந்து கொண்டனர். மதிப்பிற்குரிய ஷரீ∴ப் ஓதா சாஹிப் (கபாபீர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமீர்) அவர்கள் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார்கள். எகிப்தைச் சார்ந்த மதிப்பிற்குரிய ∴பத்ஹி அப்துஸ் ஸலாம் சாஹிப், ஜோர்டானைச் சார்ந்த மதிப்பிற்குரிய தமீம் அபூ வ∴பா சாஹிப், இலண்டனைச் சார்ந்த மதிப்பிற்குரிய தாஹிர் அஹ்மது நதீம் சாஹிப் ஆகியோர் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு அரபு மக்களுடன் இருந்து வந்த அன்பு, அரபு மொழியின் மீது அவர்களுக்கு இருந்த அன்பு, அஹ்மதிய்யா ஜமாஅத் அரபு மக்களுக்காக செய்த தொண்டுகள் போன்ற தலைப்புகளில் தமக்கிடையே உரையாடல் மூலம் கருத்துக்களைத் தெரிவித்தனர். இதே

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

## திருக்குர்ஆனிலிருந்து...

**நிச்சயமாக அல்லாஹ் இறையச்சமுடையவர்களுடனும், நன்மை செய்கின்றவர்களுடனும் இருக்கின்றான். (16:129)**

**ஜோதி அஸ்டின்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

மேலும் எவர்கள் நம்மைச் சந்திக்க முயற்சிப்பார்களோ அவர்களை நிச்சயமாக நாம், நம் வழிகளில் நடத்துவோம். நிச்சயமாக அல்லாஹ் நன்மை செய்பவர்களுடன் இருக்கின்றான். (29:70)

**அன்ஸருத்தீன்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, கோயம்புத்தூர்.

## திருக்குர்ஆனிலிருந்து...

**எவர்கள் மீது போர் தொடுக்கப்பட்டதோ, அவர்களுக்குப் [போரிட] அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஏனெனில், அவர்கள் மீது அநீதி இழைக்கப்பட்டிருக்கிறது. மேலும், நிச்சயமாக அல்லாஹ் அவர்களுக்கு உதவ ஆற்றல் உள்ளவனாவான். (22:40)**

**லஜ்னா இமாயில்லாஹ்**
ஆதம்பாக்கம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

(உங்கள்) மார்க்கத் தொடர்பாக உங்களுடன் போர் செய்தவர்களுக்கும், உங்கள் இல்லங்களிலிருந்து உங்களை வெளியேற்றாதவர்களுக்கும் நீங்கள் நன்மை செய்து, அவர்களிடம் நீதியாக நடப்பதை அல்லாஹ் தடுக்கவில்லை. அல்லாஹ் நீதியாக நடப்பவர்களை நேசிக்கின்றான். (60:9)

**A. பஷீர் அஹ்மது**
பிரதிநிதி, பத்ர் வார தமிழ் பதிப்பு, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நன்மையும், தீமையும் ஒன்றாகாது. நீர் மிக அழகியவற்றால் (தீமையை) எதிர்ப்பீராக. எவருக்கும் உமக்குமிடையில் பகைமை உள்ளதோ அவர், அதன் விளைவாக உம்முடைய நெருங்கிய நண்பராக ஆகிவிடுவார். (41:35)

**A. சம்சுல் ஆலம்**
காயித், மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா, மேலப்பாளையம்.

## திருக்குர்ஆனிலிருந்து...

நிச்சயமாக நம்பிக்கையாளர்கள் சகோதரர்கள் ஆவர். எனவே, சகோதரர்களுக்கிடையில் நீங்கள் சமாதானத்தை ஏற்படுத்துங்கள். உங்களுக்கு கருணை காட்டப்படுவதற்கு, நீங்கள் அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள். (49:11)

**மர்ஹூம் முஹம்மது ஸாலிஹ்**
மற்றும் குடும்பத்தினர், மேலப்பாளையம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒரு நபர், இறைவன் ஒருவன் என்றும் அவனுக்கு இணையில்லை என்பதையும் ஏற்றுக் கொண்ட பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏற்றுக் கொள்ளாமல் இரட்சிப்பைப் பெற்று விடுவார் என்று எண்ணுகிறார் என்றால் அவரது உள்ளம் தொழுநோயால் பீடிக்கப்பட்டிருக்கின்றது. அவர் குருடராவார். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மஜ்லிஸ் குத்தாமுல் அஹ்மதிய்யா**
**ஆதம்பாக்கம்**

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இறை வணக்கத்திலும் எந்தவொரு Tax - வரியும் இல்லை. அதிலும் ஓர் இன்பமும் மகிழ்ச்சியும் இருக்கின்றது. அந்த இன்பம் எல்லா இன்பங்களை விடவும் உயர்வானதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 159-160)

**மர்ஹூம் A.M. செய்யது அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகையை விடுவதற்காக வேண்டாத காரணங்கள் சொல்வது நஃப்ஸின் பலவீனம் தவிர வேறு எதுவும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 265; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**மர்ஹூம் A.N.A. ஹா:பிஸ்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாமல் தவ்ஹீதை ஏற்றுக் கொள்வதால் மட்டும் ஒருவருக்கு ஈடேற்றம் கிடைத்து விடும் என்ற கொள்கையை உடைய மக்கள் மறைமுகமாக முர்த்த(மார்க்கத்தைத் துறந்து சென்றவர்)களாவர். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அன்னல் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

ஒருபுறம் முழு உலகமும் நம்மை அழிப்பதற்காக ஒன்று திரண்டது. மறுபுறம் அந்த வல்லமைமிக்க இறைவன் அவர்களின் ஒவ்வொரு தாக்குதல்களிலிருந்தும் என்னைக் காப்பாற்றுகின்றான். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**மர்ஹூம் T. அப்துர் ரஹ்மான்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தொழுகை (நிறைவேற்றப்படாமல்) மன்னிக்கப்படுவதில்லை. எந்த அளவுக்கு எனில் தூதர்களுக்கு கூட மன்னிக்கப்படவில்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 1, பக்கம் 263; 1985 ஆம் ஆண்டு பதிப்பு - இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

**M.Y. கன்சுல் ஆயிஷா**
சதர் லஜ்னா இமாயில்லாஹ், உடன்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூய்மையான முழுமையான தவ்ஹீது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மூலமாக மட்டுமே கிடைக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**S.A. அப்துல் ஹக்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

இரட்சிப்பின் தலையூற்றாக இருக்கின்ற அந்த முழுமை பெற்ற தவ்ஹீதை அந்த முழுமை பெற்ற நபியைப் பின்பற்றாமல் பெறவே முடியாது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் சேக் அப்துல் காதிர்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தன்குளம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

தூதரை பின்பற்றாமல் ஏகத்துவத்தை ஏற்றுக் கொண்டதாக வாதம் செய்பவரிடம் காய்ந்துபோன எலும்புத் துண்டு மட்டுமே இருக்கின்றது. அதில் எந்த சத்தும் இல்லை. அவரது கையில் அணைந்து போன ஒரு தீபம் மட்டுமே இருக்கின்றது. (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயின் தொகுதி 22, பக்கம் 122-125)

**அட்வகேட் சலீம் அஹ்மது**
மற்றும் குடும்பத்தினர், ஆதம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

உயிருள்ள இறைவனின் உயிருள்ள ஆற்றல்களை மனிதன் பார்க்காத வரை ஷய்த்தான் அவனது உள்ளத்திலிருந்து வெளியேற மாட்டான். உண்மையான தவ்ஹீதும் அவனது உள்ளத்தில் நுழைய முடியாது என்ற விஷயமே உண்மையானதாகும். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**ஜலாலுத்தீன்**
சதர், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத், தூத்துக்குடி.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

நபி (ஸல்) அவர்கள் அரபு நாட்டிலுள்ள நாத்திகர்களுக்கும் தீய மார்க்கத்தை உடையவர் -களுக்கும் விண்ணின் ஆயிரக்கணக்கான அடையாளங்களைக் காண்பித்து இறைவன் இருக்கின்றான் என்பதை அவர்கள் ஏற்றுக் கொள்ளும்படி செய்துள்ளார்கள். (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூம் M.K.S. முஹையுத்தீன் அலி**
மற்றும் குடும்பத்தினர், கோடம்பாக்கம்.

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றிலிருந்து...

அறிவற்றவர்களே! இறைவனின் இருப்பின் மீது முழுமையான உறுதி ஏற்படாமல் அவனது ஏகத்துவத்தின் மீது எவ்வாறு உறுதி ஏற்பட முடியும்? (ஹகீகத்துல் வஹி. ரூஹானி கஸாயீன் தொகுதி 22, பக்கம் 119-122)

**மர்ஹூமா நதீரா பேகம்**
மற்றும் குடும்பத்தினர், சாத்தான்குளம்.

EDITOR
MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
RAFEEQ AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

The Weekly BADAR Qadian
பதர் வாரப் பத்திரிகை காதியான்
Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 3 Thursday 5-12 April 2018 Issue No. 14-15

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.500/- (Per Issue Rs. 9/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

*(14-வது பக்கத்தின் தொடர்ச்சி...)*

நிகழ்ச்சியில் கீழ்க்காணும் விபரங்களுக்கு ஏற்ப பல்வேறு Short Documentries (சிறிய குறும்படங்கள்) காட்டப்பட்டன. (1) ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் மு.்.மினீன் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அரபு மக்களின் பெயரில் அனுப்பி தூதுச் செய்தி காட்டப்பட்டது. இது 2015 -ல் நடைபெற்ற அரபி நேரலை நிகழ்ச்சிக்கு அடுத்த நாள் ஹுஸுர் அவர்களிடமிருந்து அனுப்பப்பட்டது. அதன் சில பகுதிகள் ஒளிபரப்பப்பட்டன. (2) ஹுஸுர் அவர்கள் அல்ஹிவாருல் முபாஷிர் என்ற அரபு நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மற்றும் ஹுஸுர் அவர்களின் தூதுச்செய்தி ஆகியவை அடங்கிய வீடியோ காட்டப்பட்டது. (3) ஸய்யிதுனா ஹஸ்ரத் நான்காவது கலீ.்.பத்துல் மஸீஹ் ரஹிமஹுல்லாஹுத்தஆலா அவர்களின் குரலில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் அரபு மக்களிடம் வெளிப்படுத்திய அன்பு தொடர்பான அன்னாரது மேற்கோள்கள் படித்துக் காட்டப்பட்ட காட்சி ஒளிப்பரப்பானது. (4) ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது மேற்கோள்களின் அரபி மொழியாக்கம் ஒளிபரப்பப்பட்டது. (5) ஸய்யிதுனா ஹஸ்ரத் இரண்டாவது கலீ.்.பத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் அரபு மக்களுக்கு செய்திருந்த போதனைகள் எடுத்துக் கூறப்பட்டது. (6) ஹஸ்ரத் சவுத்ரி சர் முஹம்மது ஸ.்.பருல்லாஹ் கான் ஸாஹிப் அவர்கள் அரபு நாட்டு மக்களுக்கு செய்திருந்த உலகளாவிய தொண்டுகள் அடங்கிய புகைப்படங்கள் வீடியோக்களின் வடிவில் காட்டப்பட்டன. (7) ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் இரண்டு கஸீதாக்கள் காதியானின் காட்சிகளுடன் ஒளிபரப்பப்பட்டன. இரண்டாவது நாள் நிகழ்ச்சியில் இரண்டு தொலைபேசி அழைப்புகளில் பேசியவர்களுக்கு நிகழ்ச்சிகள் தொடர்பாக தமது தாக்கங்களை தெரிவிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டது. அவர்களும் தமது தாக்கங்களை தெரிவித்தனர்.

## The Messiah of the Age என்ற பெயரில் ஆப்பிரிக்காவிற்கான நேரலை நிகழ்ச்சி

இவ்வாறே 2018 ஆம் ஆண்டு 3 முதல் 5 ஆம் தேதி வரை அல்லாஹ்வின் அருளால் M.T.A இன்டர்நேஷனலின் காதியான் ஸ்டுடியோவிலிருந்து The Messiah of the Age என்ற பெயரில் ஆப்பிரிக்காவிற்கான நேரலை நிகழ்ச்சி ஒளிபரப்பானது. நிகழ்ச்சி ஒரு மணி நேரம் ஒளிப்பரப்பானது. நிகழ்ச்சி ஆங்கில மொழியில் இருந்தது. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக கீழ்க்காணும் கண்ணியத்திற்குரிய விருந்தினர்கள் காதியான் வருகை தந்திருந்தனர்.

மதிப்பிற்குரிய மவ்லவி அப்துல்லாஹ் ஸாஹிப் டபா (அமெரிக்கா ஜமாஅத்தின் முரப்பி) அவர்கள் நிகழ்ச்சி தொகுப்பாளராக இருந்தார்கள். மதிப்பிற்குரிய மவ்லானா அஸ்ஹர் ஹனீ.்.ப் ஸாஹிப் (நாயிப் அமீர் அஹ்மதிய்யா ஜமாஅத், அமெரிக்கா), மதிப்பிற்குரிய மவ்லானா ஹா.்.பிஸ் அப்துல் கனீ ஸாஹிப் (நைஜீரியா ஜமாஅத்தின் முரப்பி), மதிப்பிற்குரிய மவ்லவி அப்துர் ரஹ்மான் ஸாம் ஸாஹிப் (அமெரிக்கா), மதிப்பிற்குரிய அப்துல் லத்தீ.்.ப் ஸாஹிப் (அமெரிக்கா), மதிப்பிற்குரிய ஹபீல் ஸ.்.பீக் ஸாஹிப் (அமெரிக்கா) ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்ச்சியில் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் தோற்றுனர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் பிறந்த இடமான காதியான் தாருல் அமானைப் பற்றிய அறிமுகம் ஸய்யிதுனா ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உயரிய நல்லொழுக்கங்கள், ஆண்டு மாநாடு பற்றிய அறிமுகம், இமாம் மஹ்தி மற்றும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை ஏற்றுக் கொள்வதன் முக்கியத்துவம், அஹ்மதிய்யா கிலா.்.பத்தின் அருள்கள், ஹஸ்ரத் ஐந்தாவது கலீ.்.பத்துல் மஸீஹின் அருளுக்குரிய கிலா.்.பத் காலக்கட்டத்தில் அஹ்மதிய்யா ஜமாஅத்திற்கு கிடைத்திருக்கின்ற முன்னேற்றம் ஆகியவை பற்றி விரிவாக விளக்கிக் கூறப்பட்டது. இந்நிகழ்ச்சியில் கீழ்க்காணும் Short Documentries (சிறிய குறும்படங்கள்) காட்டப்பட்டன.

காதியானிலுள்ள புனித இடங்கள் பற்றிய சுருக்கமான அறிமுகம், ஆண்டு மாநாடு பற்றிய சுருக்கமான வரலாறு, காதியானின் 2017 ஆம் ஆண்டு மாநாட்டின் காட்சிகள் ஆகியவை இந்நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தன. இவை தவிர ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தூய வாழ்வில் நடைபெற்ற சம்பவங்கள் நேர்காணல் நிகழ்ச்சியின் வாயிலாக எடுத்துக் கூறப்பட்டது. காதியானின் காட்சிகள் காட்டப்பட்டன. ஓர் அமெரிக்க அஹ்மதி, தான் அஹ்மதிய்யத்தை ஏற்று கொண்டது பற்றி கூறிய விஷயங்கள் உள்ள Recording ஒளிபரப்பப்பட்டது. உண்மையான இஸ்லாமிய கிலா.்.பத் தொடர்பாக அறிமுகம் செய்யப்பட்டிருந்த வீடியோ காட்சி காட்டப்பட்டது. அஹ்மதிய்யா கிலா.்.பத்தின் அருள்கள் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய முன்னேற்றம் தொடர்பாகவும் எடுத்துக் கூறப்பட்டது. ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பல்வேறு நாடுகளிலிருந்து தொலைபேசி அழைப்பாளர்களும் கலந்து கொண்டனர். அல்லாஹ்வின் அருளால் ஆப்பிரிக்க ஜமாஅத் சகோதரர்களிடம் இந்த நிகழ்ச்சியானது வழக்கத்திற்கு மாற்றமாக பெரும் வரவேற்பைப் பெற்றது. குறிப்பாக காதியானிலிருந்து நேரடியாக நிகழ்ச்சி ஒளிபரப்பப்பட்டதன் காரணமாக மக்கள் இந்த நிகழ்ச்சியை மிகவும் விரும்பினர்.

அல்லாஹ் கலப்பற்ற தூய உள்ளத்துடனும், நன்றியுணர்வுடனும் தொண்டு செய்த அனைவரையும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களது துஆக்களுக்கு வாரிசாக்குவானாக. ஆமீன்.

**(தகவல்: அறிக்கைத் துறை, காதியான் ஆண்டு மாநாடு 2017)**

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அவரது மரணம் நிகழ்க்கின்றது. மேலும் அவர் சுவர்க்கத்தில் நுழைந்து விடுகின்றார். இந்த முன்னறிவிப்பின் உண்மைக்கான ஆதாரம் இதுவாகும். இதனை எந்தவோர் எதிரியாலும் மறுக்க முடியாது. அதாவது, எனது இந்த முன்னறிவிப்பின் உண்மைக்கான ஆதாரம் இதுவாகும். இதனை எந்த ஒரு எதிரியாலும் மறுக்க முடியாது. எனது இந்த முன்னறிவிப்பை தனது எந்த நூலில் மீர் அப்பாஸ் அலி அவர்கள் தனது கைகளால் எழுதினாரோ அது இப்போது வரை இருக்கின்றது. (அந்த முன்னறிவிப்பு நிறைவேறி விட்டது) அவரது மரணத்திற்குப் பிறகு ஒருமுறை நான் அவரை கனவில் பார்த்தேன். அவர் கருப்பு நிற ஆடையை அணிந்திருந்தார். தலை முதல் கால் வரை அது கருப்பாகத்தான் இருந்தது. மேலும், அவர் என்னிடமிருந்து ஏறக்குறைய 100 அடி தூரத்தில் நின்று கொண்டிருக்கின்றார். என்னிடம் உதவியாக கொஞ்சம் வழங்குமாறு கேட்கின்றார். அதற்கு இப்போது நேரம் கடந்து சென்று விட்டது. இப்போது நமக்கும் உமக்கும் இடையில் அதிகமான தூரம் இருக்கின்றது. நீ என் வரை வந்து சேர முடியாது என்று நான் பதில் கூறினேன்.

**127 -வது அடையாளம்:** சேஜ்ராம் என்ற ஒரு நபர் அமிர்தசரஸிலுள்ள கமிஷ்னாரியில் தலைமை எழுத்தராக இருந்து வந்தார். முதலில் அவர் சியால்கோட் மாவட்டத்தில் டெபுடி கமிஷனரின் எழுத்தராக இருந்தார். அவர் என்னிடம் எப்போதும் மார்க்க விவாதம் செய்து வந்தார். இஸ்லாம் மார்க்கத்தின் மீது இயல்பாகவே அவருக்கு வெறுப்பு இருந்து வந்தது. தற்செயலாக எனது மூத்த சகோதரர் தாசில்தாருக்கான தேர்வை எழுதியிருந்தார். தேர்வில் அவர்கள் தேர்ச்சி பெற்று விட்டார்கள். இப்போது அவர்கள் காதியானில் வீட்டில் இருந்து வந்தார்கள். வேலையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஒருநாள் நான் வீட்டின் மேல் மாடியிலிருந்த எனது அறையில் அஸ்ர் நேரத்தில் திருக்குர்ஆன் ஓதிக் கொண்டிருந்தேன். நான் திருக்குர்ஆனின் அடுத்த பக்கத்தை திருப்புவதற்கு முற்பட்டபோது எனது கண்கள் கஷ்ஃப் காட்சியைப் பார்க்க ஆரம்பித்தது. சேஜ்ராம் கருப்பு ஆடையை அணிந்தவாறு பணிவை வெளிப்படுத்துபவர் போன்று பற்களைக் காட்டியவாறு என் மீது கருணை காட்டுங்கள் என்று ஒருவர் கூறுவதுபோன்று எனக்கு முன்னால் வந்து நின்றார். இப்போது கருணை காட்டப்படுவதற்கான நேரம் அல்ல என்று நான் அவரிடம் கூறினேன். அத்துடன் இதே நேரத்தில் இந்த நபர் இறந்து விட்டார். அது பற்றிய எந்த செய்தியும் கிடைக்கவில்லை என்பதை இறைவன் எனது உள்ளத்தில் இட்டான். இதற்கு பிறகு நான் கீழே இறங்கினேன். எனது சகோதரருக்கு அருகில் ஆறு அல்லது ஏழு பேர் அமர்ந்திருந்தனர். அவர்கள் அவர்களுக்கு வேலை கிடைப்பது பற்றி பேசிக் கொண்டிருந்தனர். பண்டிதர் சேஜ்ராம் அவர்கள் இறந்து போனால் அந்த பதவியும் கூட சிறந்ததாகவே இருக்கின்றது என்று நான் கூறினேன். இவர்கள் எல்லாரும் நான் கூறியதைக் கேட்டு நல்ல நிலையில் இருக்கும் மனிதரை ஏன் கொல்கின்றாய் ? என்றவாறு எள்ளி நகையாடி கேலி கிண்டல் செய்தனர். இரண்டாவது அல்லது மூன்றாவது நாளில் அதே நேரத்தில் சேஜ்ராம் தீடீரென்று மரணித்து இந்த உலகை விட்டுச் சென்று விட்டார் என்ற செய்தி வந்திருந்தது.

(ஹகீகத்துல் வஹி. ரூஹானீ கஸாயின் தொகுதி 22 பக்கம் 307)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of the Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad